திராவிடநாடு

23—3—58 | வார வெளியீடு | விலை 16காசு


# தூதும் உணர்வும்

—[இளம்பாரதி]—

“இருள்சூழ்ந்து களையிழந்த இந்த நாட்டில்
இன்பந்தான் என்றுவரும்?” என்ற எண்ணம்
விரைந்துவந்தென் சிந்தனையை இழுத்த போது
விண்ணோக்கி நின்றிருந்தேன் விளக்கம் காண.
“அருளூட்டும் வகையெல்லாம் பெற்ற பின்னும்
ஆனந்தம் ஏனில்லை?” என்று கேட்கும்
குரல்கேட்டேன். கண்ணெதிரே முகிலாள் நின்றாள்;
கூறியவள் எனைநோக்கிச் சிரித்து நின்றாள்.

பதிலறியேன், ஆதலினால் அவளை உற்றுப்
பார்த்திருந்தேன் அவள்சொல்லைக் கேட்க வென்று.
சுதியாகத் தன்குரலில் இளமை கூட்டிச்
சொல்லலுற்றாள் முகில்மங்கை என்னை நோக்கி:
“இதயத்தில் செந்தமிழை மக்கள் நீவிர்
என்றேனும் சுவைத்ததுண்டா? மேலும் அந்தச்
சுதந்திரத்தாய்க் கொடியின்கீழ் ஒன்று கூடி
சுணக்கமின்றி வேற்றுமையை வென்ற துண்டா?”

உணர்வுற்றேன், உள்ளத்தில் பொங்கி வந்த
உவகையினை என்சொல்லால் எதிரொலித்தேன்:
“உணர்வேற்றித் தமிழ்போற்றி நாட்டார் எல்லாம்
உண்மைவழி நடந்திடுவோம் அச்ச மின்றி.
தணலாகக் கொதிக்கின்ற வாழ்வும் ஓர்நாள்
தண்மதியாய் மாறிவிடும், ஐயம் வேண்டாம்!
உணர்வுடனே தமிழ்ப்பாடி வாழ்ந்து விட்டால்
உள்ளத்தில் கண்டிடலாம் அழியா இன்பம்!”

## கேட்டீரா! சேதி!

"உத்தரப்பிரதேசத்தின் மகிமை தெரியுமா, உங்களுக்கு! இராமரும், கிருஷ்ணரும், புத்தரும் அங்குதான் பிறந்தார்கள்- உபரிஷத்தும், பிரம்ம சூத்திரங்களும், கீதையும் அங்குதான் முளைத்தன. இந்துமதம், வேரூன்றக் காரணமே, இந்த உத்தரப்பிரதேசம்தான்! ஆரியர்களுடைய மொழியான சமஸ்கிருதம், இங்கிருந்துதான், அகில இந்தியாவுக்கும் சென்றது!!" — இப்படி, காசியைச் சேர்ந்த பிஜாய் கோபால்ராய் என்பவர், 'இந்து' ஏட்டில் ஒரு கடிதம் தீட்டியிருக்கிறார்.

*

உத்தரப்பிரதேசம், அந்தக் காலத்தில் முக்கியம்பெற்றதோ இல்லையோ, இப்போது அதுதான் முதன்மையாக இருக்கிறது! அங்குதான் இந்துமகா சபை வெறிகொண்ட தாண்டன் போன்றவர்கள் இருக்கிறார்கள்- அந்த மாகாணவாசிகளுக்குத்தான் இந்திய அரசில் யோகத்துக்கு மேல் யோகம் அடித்துக் கொண்டிருக்கிறது!! நேருகூட, அங்கு பிறந்தவர்தானே? அவருடைய சகோதரி விசயலட்சுமியிலிருந்து, அந்த விசயலட்சுமிக்கு 'வெறும்' சிநேகிதையாக விளங்கிய கல்லூரி ஆசிரியை லட்சுமிமேனன் வரையில் அரசில் இடம் பெற்றிருக்கிறார்கள!!

*

புதிதாக நேரு பண்டிதர், தனது டில்லி மந்திரி சபையை மாற்றியமைத்துள்ளாரல்லவா? இந்த 12 மந்திரிகளில் ஐந்து பேர் உத்திரப் பிரதேசத்தார் தானும்! நேரு, பந்த், லால்பகதூர் சாஸ்திரி, அஜீத் பிரசாத் ஜெயின், புதிய மந்திரி ஹபீஸ் எனும் ஐவர்தான் அவர்கள்.

*

" இந்த பன்னிரண்டு "சூத்திரதாரிகளில்" ஒருவர் சென்னையைச் சேர்ந்தவராக இருந்தார். இப்போது அதுவும் போய்விட்டது. "எடுபிடி ஆட்கள்" என்ற கூட்டத்தில்தான், சேலத்தைச் சேர்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்துள்ளனர்", என்று குறைபட்டுக் கொள்கிறது, 'நவ இந்தியா' எனும் காங்கிரஸ் ஏடு!!

*

யாராவது ஒருவர் மந்திரியாக வரவேண்டுமென்றால் சர்க்காரை எதிர்த்துப் பேசிக் கொண்டேயிருந்தால் போதும்! —என்பார்கள், டில்லியைப் பற்றிச் சொல்லும்போது, தியாகி என்பார் கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருந்தார், 'சான்ஸ் அடித்தது—அளகேசன், 'வடக்கு தெற்கு' என்று அடிக்கடிபேசுவார், ஒரு 'சான்ஸ் அடித்தது—எஸ். வி. ராமசாமியும் அடிக்கடி தெற்கில் தொழில் வளம் இல்லாதது பற்றியும் சேலத்து இரும்பு குறித்தும் பேசிக்கொண்டேயிருந்தார்- துணை மந்திரிப் பீடம் கிடைத்திருக்கிறது, இப்போது! இனிமேல், இவரும் வாயைத் திறக்க முடியாதல்லவா!!

*

12 முக்கிய மந்திரிகளில் ஐவர் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். மீதியுள்ள 7-பேரில் மொரார்ஜி தேசாய், எஸ். கே. பட்டீல், குல்சாரிலால் நந்தா, மூவரும் பம்பாயைச் சேர்ந்தவர்கள். கிருஷ்ணமேனனும், பம்பாயில் தேர்தலில் வெற்றிபெற்றவர். ஆகவே, "......உள்ள நிலைமையை வைத்துப் பார்த்தால் மத்தியில் ஆதிக்க இழுவைப் போட்டி "பம்பாய்க்கும உத்திரபிரதேசத்துக்கும் இடையேதான் நடைபெறும் போல் தோன்றுகிறது", என்கிறது நவஇந்தியா எனும் ஏடு!!

★

# மின்சாரத் தொழிலாளர்கள்

"தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால், அது வேடிக்கைக்கோ, பொழுதுபோக்குக்காகவோ, அல்லது மகிழ்ச்சிதரத்தக்கதொன்றென்றோ அவர்கள் அதில் ஈடுபடவில்லை. அந்த வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க, எத்தனை முறைகள் உண்டோ அந்த முறைகளிலெல்லாம் முயன்று, தொழிலாளர்களுக்கு அன்புரை வழங்க ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். அப்படியல்லாமல், இவர்கள் என்ன செய்யமுடியும், என்று அலட்சியபபடுத்திவிடுவதோ, நம்மை இவர்கள் எதிர்க்கிறார்களே என்று ஆத்திரப்படுவதோ ஆட்சியாளருக்கு அழகல்ல. "இவர்களை எந்தெந்த எதிர்க்கட்சிக்காரர்கள் ஆதரிக்கிறார்கள்; அவர்களையெல்லாம் பிடித்து முதலில்உள்ளேவைத்து விடுவோம்" என்று கருதுவதும் முறையல்ல.

"வேலை நிறுத்தம் என்றால், அதனால் விளையும் விளைவை அறிந்துதான — பொறுப்பை உணர்ந்துதான்—அதிலே நல்ல அடிப்படை இருக்கிறது என்பதைக் கருதித்தான ஈடுபடுகிறார்கள் தொழிலாளர்கள். வேலைநிறுத்தம் எனபது ஏதோ மனித உரிமைக்கு அப்பாற்பட்டதல்ல.

"மின்சாரத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் மிகமிகக் குறைந்தவைதான். அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதால் சர்க்காருக்கு ஒன்றும் நஷ்டமில்லை. பசிபோக்க ஒருபிடி சோறுபோல இருள்போக்க ஒளிதருகிறது மின்சாரம். உலகுக்கு ஒளியும் தொழிலுக்கு உயிரூட்டமும கொடுத்துவிட்டுத்தான வயிற்றுக்குக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள் அவர்கள்."

# கதவு திறக்கட்டும்!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [23-3-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 36

ஒருவர் வயது முதிர்ந்தவர்; இன்னொருவர் வாழ்வின் வசந்தமலர்.

"வாழ்க பெரியார்! ஒழிக சாதிச் சட்டம்!!" எனும் முழக்கங்களை, இதயத்திலேந்தி, வீறு நடை போட்டுச் சிறைக்குள் சென்றவர்கள், அவர்கள்.

இரு கிழமைகளுக்கு முன்பு, சிறைக்கதவு திறந்தது — இராமசாமி, வெள்ளைச்சாமி எனும் அந்த இருவரும், சடலமாகத் தரப்பட்டிருக்கிறார்கள்! ஆர்வம் உமிழும் கண்கள், மூடிப்போய்க் கிடந்தன; எந்தக் கையை உயர்த்தி உயர்த்தி முழக்கமிடுவரோ அந்தக் கைகள் துவண்டுபோய்விட்டன; மூச்சு அடங்கிவிட்டது; பேச்சு இனிக் கிளம்பாது; பிணமாயினர் அந்த இரு தோழர்களும்!!

சாதி ஒழிப்பினை அடிப்படையாக வைத்து ஆயிரக் கணக்கானவர்களைப் பிடித்து அடைத்தது, இந்த சர்க்கார். அவர்கட்கு வாங்கித் தரப்பட்ட தண்டனையும் சாதாரணமானதல்ல! ஆறு மாதம்—ஒன்பது மாதம் — ஒன்றரையாண்டு—இரண்டாண்டு என்று திகைப்பு ஏற்படும் வகையில் தண்டனைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன!! பெரியார் அவர்களின்மீது கொண்டுள்ள ஆழ்ந்த அன்பும், தாம் இதயத்தில் சரியெனக் கொண்டுள்ள கொள்கை வேகமும், அவ்வளவு தோழர்களையும் ஆனந்தத்தோடு, சிறைக்குள் நுழையச் செய்தது.

எவராயினும் சரி, கொண்ட கொள்கைக்காகத் தியாகத் தழும்புகளை ஏற்கத் துணிவுடன் முன்வருகின்றனரோ, அந்தத் தொண்டர்களை, பாராட்டத்தான் வேண்டும். சரியா, தவறு என்பது வேறு. ஆனால், சரியென மனதில் பட்டதற்காக—மழலை பேசிடும் குழவி, மனதுக்குள் அழும் மனைவி, வாய்விட்டுக் கதறும் பெற்றோர், கொட்டும் வறுமைத் தேள், வாட்டும் குடும்பப் பிரச்னை போன்றவைகளை விட, கொள்கையே பெரிதெனக் கருதும் தொண்டர்கள், ஒரு இயக்கத்தின் கண்கள்! அந்தக் கண்களில் இரண்டினை, அரசு, போக்கிவிட்டது—இராமசாமியும் வெள்ளைச்சாமியும் இனித் திரும்பிவரார்-அவர்களது வீரமுகத்தை இனிக் காணஇயலாது — "வாழ்க!" என்று நெஞ்சு நிமிர்த்தி இடுவரே முழக்கம், அதனைக் கேட்கப்போவதில்லை, கழகம் — வீரர்களாகச் சென்றார்கள் சிறைக்குள்! பிணமாகத் தரப்பட்டார்கள், திராவிட கழகத்திடம்!!

இந்த முறை, திராவிட கழகத்தார் சிறைக்குச் சென்ற காரியம், தீதானது என்று ஆளும் கட்சியோ கூறமுடியாது. ஏனெனில், சாதி ஒழிப்பை முன்னிட்டு அவர்கள் சட்டம் கொளுத்துமளவுக்குப் போனார்கள். அந்தச் சாதி ஒழிப்பில் தமக்கும் அக்கரையிருப்பதாகச் சொல்லுகிறது காங்கிரஸ் அரசு! திராவிட கழகத்தார் கூட்டிய சாதி ஒழிப்பு மாநாடுகளிலும்கூட நாடாளும் காமராசர் கலந்து கொண்டு, பெரியார் அவர்களின் பிரியத்தையும் — கழகத்தவர் சூட்டிய மாலைகளையும், பெற்றதுண்டு!! அதே சாதி ஒழிப்புக்காக, இவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள்—காமராசரோ கோட்டையில் தான் கொலுவிருக்கிறார். சிறைக்குச் சென்றவர்களில் இருவர், பிணமானார்கள்! காமராசரோ, 'ஓட்டல் போர்டுகளில் சாதிப் பெயர் போடலாகாது" என்று நகர சபைகள் தாமாகவே முன்வந்து போட்டனுப்பிய தீர்மானம் செல்லாது என்கிறார்—அவர் அரசு, 'அப்படித் தீர்மானம் போடாதே' என்று தாக்கீதும் அனுப்பியிருக்கிறது!!

ஓராண்டுக்கு முன், நாடே கண்டது. எங்கு பார்த்தாலும், "காமராசர் வெற்றி, திராவிட கழகத்தின் வெற்றி", என்று சுவரெல்லாம் தீட்டப்பட்டதை. துப்பாக்கியிலிருந்து விடுபட்ட தோட்டாக்கள் என, திராவிட கழகத் தலைவர்கள், நாடெங்கும் போய்ப் பேசினார்கள்! ஏசினார்கள், காங்கிரசினை எதிர்ப்போரை!! தனது தள்ளாத வயதிலும், பெரியார் அவர்கள், பட்டபாடு கொஞ்சமல்ல. அப்படிப்பட்டவர்களுக்கு, காங்கிரஸ் அரசு காட்டிய கைம்மாறு சிறை! ஓராண்டு, ஒன்பது மாதம்! பிணப் பரிசு! தீர்மானம் போடாதே எனும் தாக்கீது!!

மலர் மாலைகளைச் சென்ற இடமெங்கும், திராவிட கழகத்தாரிடமிருந்து பெற்றார் காமராசர், பதிலுக்கு

கஞ்சிக் கலயமும் சிறை உடுப்பும் அளித்திருக்கிறார்! மாட்டுப் பெட்டியை மனதாலும் நினைக்கமுடியாத திராவிட கழகத் தீரர்கள், அதே மாட்டுப் பெட்டிக்குப் போய் ஓட்டுகளைப் போட்டார்கள் — பதில், இன்று சிறையும், தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது!! ஓட்டு வாங்கவும், உரத்துப் பேசவும், காமராசருக்கு பெரியார் தேவைப்பட்டார்; அது முடிந்ததும், காமராசர் மனம் மூடிவிட்டது. சிறையும், வழக்கும் தண்டனையும், வெகுமதியாக வழங்கப்பட்டிருக்கிறது பெரியாருக்கும் அவரது தொண்டர்களுக்கும்!!

குடியரசு தின விழா வரும்போது, பல தரப்பட்ட கைதிகளையும் திறந்துவிடுவதுபோல, இந்த அரசியல் கைதிகளையும் அனுப்பிவிடுவார்கள்—பெரியாரையும் விடுதலை செய்துவிடுவார்கள் — என்று சொல்லப்பட்டது. நாமும், எதிர்பார்த்தோம். ஏனெனில், சட்டமும் நீதிமன்றமும், தண்டனை வழங்கிற்றே ஒழிய, அரசு விரும்பினால் அனைவரையும் திறந்துவிடலாம். ஆனால், கதவும் திறக்கவில்லை; அரசின் மனமும் இளகவில்லை. இதோ, இருவர் பிணமாயினர்! சிறைக்குள்ளிருந்து இரண்டு வீரர்களின், உடலைத் தந்திருக்கிறார்கள் திராவிட கழகத்துக்கு!!

செய்தி கேட்டதும், திகைத்தோம்; மனந்துடித்தோம்; மாவீரர்களின் பட்டியலிலே சேர்ந்துவிட்ட அந்த இரு தோழர்களையும் எண்ணினோம்; காமராசர் வெற்றி பெற வேண்டுமென்று என்ன ஆர்வம் காட்டியிருப்பர் அத்தோழர்கள்! தலைவரின் கட்டளையைச் சிரமேல்தாங்கி, காங்கிரசுக்கு ஓட்டு வாங்க எங்கெங்கு அலைந்திருப்பர்!! அதற்குப் பரிசு, சாவா? அதற்குப் பரிசு சிறையா? அதற்குப் பரிசு, ஓராண்டு ஈராண்டா? ஐயகோ, அவர்தம் குடும்பத்தினர், என்ன எண்ணுவர்—பெற்றெடுத்தோரும், குழந்தை குட்டிகளும் என்ன பாடுபடும்? அரசினர், சமாதானம் சொல்லுகிறார்கள் — சிறைக்குள், சீதபேதியாம்— வேண்டிய வைத்திய உதவி செய்தனராம் — இருந்தும் செத்துவிட்டார்களாம்! ஏன் ஏற்பட்டது சீதபேதி—என்ன உணவு வழங்கப்பட்டது இவர்களுக்கு —அரசு தெளிவுபடுத்தவேண்டும் என்பதற்காகவே, சட்டசபையில் தி. மு. க-வும் தோழர் ஆதித்தனும் ஒத்திவைப்புப் பிரரேபணையைக் கொண்டுவந்தனர். தலைவர் அனுமதிக்கவில்லை. எனினும், நாடு, விளக்கம் பெற விரும்புகிறது, அரசிடமிருந்து!!

இந்தக் கிழமை செய்தியொன்று வருகிறது— திருச்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்த 51-திராவிட கழகத் தோண்டர்கள், அரசின் உத்திரவின் பேரில், விடுவிக்கப்பட்டிருக்கிறார்களாம். நல்ல சேதி. இதன் மூலம், நாட்டுக்குக் கிடைக்கும் விளக்கம் தெளிவாகிறது. எப்போது வேண்டுமானாலும், அரசு விரும்பினால், அடைபட்டுக் கிடக்கும் இவர்களை, திறந்து வெளியிலே போகச் சொல்ல முடியும்; அதற்கு வழியும்வகையுமிருக்கிறது! அதைவைத்து ஏன் அனைவரையும், குடியரசு விழாவின்போதே காமராசர் விடுதலை செய்திருக்கக் கூடாது?—இப்போது வளைந்து கொடுத்த மனம், அப்போது ஏன் வளையவில்லை! இருவர் பிணமாகியிருக்கமாட்டார்களே— காமராசர் அரசுக்கு இருவர் பிணமாவது சாதாரணமாயிருக்கக் கூடும் — ஆனால் கழகத்துக்கும் பெரியாருக்கும் கண்மணிகளைப் போன்றவர்களன்றோ! பேச்சையும் மூச்சையும் ஒப்படைத்துப் பாடுபடும் உயர்தரத் தொண்டர்களன்றோ, அவர்கள்!! சந்தர்ப்பத்தைத் சாதகமாக்கி, காமராசர், சிறைக் கதவுகளைத் திறந்துவிடுவார்—பெரியார் சிறையில் வாட அவர் மனம் தாங்காது—மலர்மாலைகளைப் போட்ட கழகத் தோழர்களைப் பழிவாங்கமாட்டார் — என்றே நம்பினோம். பிணம் தரப்பட்டிருக்கிறது! வெள்ளைச்சாமியும் இராமசாமியும் சவங்களாக்கப்பட்டார்கள்!! அதற்குப் பிறகு, கதவு திறக்கப்படும் 'கட்டம்' அரும்பியிருப்பதாகச் செய்தி வருகிறது.

51 தோழர்களை வெளியே அனுப்பியதன் மூலம், அரசு விரும்பினால், அனைவரையும் விடுதலை செய்யலாம் என்று காட்டிக்கொண்டிருக்கிறது. எனவே, பெரியார் அவர்களையும், சிறையில் வாடும் ஏனைய தொண்டர்களையும், அரசு திறந்துவிடலாம். ஆனால், சிறைக்கதவு திறப்பதற்கு முன், காமராசரின் மனக் கதவுதிறக்கவேண்டுமே! தனக்கும், தன் ஆட்சிக்கும் இப்போதுகூட கெட்ட பெயர் வராமல் காப்பாற்றுவதில் அக்கரைகாட்டும் பெரியார் அவர்களைக் கருதியாவது, காமராசரின் மனக்கதவு திறக்கப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். மனக்கதவு திறக்குமா! அனைவரும் விடுவிடுக்கப்படுவார்களா!!

★

# கேரளத்துக் குயில்

மலையாளத்தின் கவியரசராக விளங்கிய வள்ளத்தோல் அவர்கள், சென்ற வாரம் காலமானார் எனும் செய்தி, எம்மைத் திடுக்கிடவைத்தது. வாழும் முற்போக்குக்கவிகளில், ஒருவர் அவர். அர்த்தமற்ற கற்பனையும், எழுத்துக்களை முடைதலுமட்டுமின்றி, விடுதலையுணர்வுக்கான வீரமூட்டும் கவிதைகளை உருவாக்கிய கவிஞர் அவர். அதனாலேயே அவர் மக்கள் மன்றத்தின் ஒப்பற்ற கவிஞரானார். மலையாள மொழிக்கு மட்டுமின்றி, கேரளம் போற்றிவரும் கதகளி நாட்டியத்துக்காக ஒரு கலைக்கூடமும் நிறுவி, பாடுபட்டு வந்தார் அக்கவிக் குயில். அவரது மறைவு, கேரளத்துக்கும், திராவிடத்துக்கும் பெரியதோர் இழப்பாகும்.

★

சிறுகதை

# "நரகம்"

— பழநி —

அழகான வீடுகள்! பளபளப்புக் குன்றுத கார்கள்! பாய் இல்லாமலே படுக்கலாம் என்று எண்ணத்தக்க வகையில் வழவழப்பான பாதைகள்! சாலைகளைச் சோலைகளாக்க நட்டுவைக்கப்பட்டிருந்த மரங்கள்! அதன் ஓரத்தில் ஒய்யாரமாக நடந்து செல்லும் நாகரிக மனிதர்கள். பார்ப்பதற்குப் பரவசமூட்டும் கோலாகலக் காட்சிகள்! இதுதான் பட்டினம் என்று எண்ணிவிட முடியுமா? இன்னொரு பகுதியும் உள்ளதே!!

அந்தப் பகுதியில் சேறும் சகதியும் நிறைந்துகிடந்தது; நான் நடந்து வந்திருந்த குறுகலான நடைபாதை என்னைப் பார்த்துச் சிரித்தது.

சகல நோய்களின் உற்பத்தியின் பிறப்பிடமான திருத்தலம் அது!

அந்த இடத்தில் ஒழுங்கு என்பதின் எதிர்ப்பொருளாக விரிக்கப்பட்டிருந்த வியாபார நிலையங்களில் அழுகிப்போன பழங்கள்! கெட்டுப்போன காய்கறிகள்! ஊசிப்போன பலகாரங்கள்! உபயோகததிலிருந்து நீக்கப்பட்ட துணிமணிகள்! இப்படிப் பலரகமான "உயர்ந்த பொருள" இந்நாட்டு மனனர்களின வாங்கும் திறனைச் சோதிககப் பரபபபபட்டிருந்தன! பரட்டைத் தலை அழகிகள, நோஞ்சல் நடை வீரர்கள, கந்தல ஆடைக்காரர்கள். இப்படி ஒரு கூட்டமே அந்த மாாகெட்டைச் சுற்றி வளைத்துக்கொண்டு அந்நியர்படையெடுப்பைமுறியடிததுத தங்களுக்கே ஏகபோக உரிமை என்று மார்தட்டுகின்றனர். தங்களின இல்லங்களுக்குத் தேவையான சுவை மிகு உணவுப் பண்டங்களை வெகுசாக்கிரதையுடன் விலை பேசி வாங்கி, புத்தம் புதிய கந்தலில் வைத்துச் சுருட்டிக் கட்டிக்கொண்டு தென்றல் நடை போட்டது தையலர் கூட்டம்!

*

ஏக அமர்க்களமாக வியாபாரம் நடந்துகொண்டிருந்தது. ஒரு இளம் பெண், கையிலே, மழலைச் செல்வமொன்றைத்தரதரவென்று இழுத்துக்கொண்டு வந்து கடை முன்னல் நிறுத்தி வியாபாரம் செய்துக்கொண்டிருந்தாள். குழந்தையோ, ஓட்டை உடசல் கடையை முற்றுகையிட்டு அடம் செய்ய ஆரம்பித்தது. தாயோ பேயாக மாறவில்லை, அன்பு என்றுல் இன்னது என்று அறியாத உள்ளம். ஆகவே, பிறந்த நாள் முதல் ஆடை என்றுல் என்ன என்று தெரியா அப்பிஞ்சின் முதுகில் ஒட்டிவிட்டிருந்த தூசியை நாலு தட்டுவிட்டுத் தட்டினுள்.

**பித்தன்**

அந்தச் "சனியனு" தன் திருவாயை அகலமாகத திறந்து வானெலிபோல் பாடத் தொடஙகியது. அனனையின் முகத்தில் அமைதி பொஙகி வழிந்தது. குழிக்குள்ளிருந்த கண்கள கருவிலிருந்து வரும முட்டைபோல் வெளியே வந்துவிட்டது. வாடி, வதங்கிககிடந்த உதடுகள் ஆனந்தமாக ஆரபரிக்க அசைந்தது. ரோசாக்கனனத்தில பூசபபட்டிருந்த கரி, குட்டிக்கூராபௌடராகியது. நிலைமாறிய அவள் தலையின் கூந்தல், அலைபாயும் கார்முகிலாகியது. இன்ப மிகுதியால் தன் செல்வத்தை வாரியணைத்துக்கொண்டவள் மடியிலே கை வைத்தாள். வயிறு என்று இருக்குமிடம் பெரும் பள்ளமாகக்கிடந்தது. அவள் வதனத்தில் மின்னல்போல் ஓர் முறுவல்!! அடுத்த விநாடி அவள் நடந்தாள்—சற்றுமுன் வழவழப்பான தார்ரோடுகளையும், வானளாவிடும் மாடமாளிகைகளையும் கண்டு அனுபவித்தவர்கள் இப்பொழுது மூக்கு இருப்பதின் சிரமத்தை அறிய நேர்ந்தது. நானும் என்னையறியாமலே மூக்கைப் பிடித்துக்கொண்டே நடந்தேன்!!

இன்னும் சற்றுத்தூரம் சென்றுவிட்டால் 'இவ்வின்ப' உலகிலிருந்து விடுதலை பெற்றுவிடலாமென்ற நம்பிக்கையில் கால்கள் துரித நடை போட்டுக்கொண்டிருக்கையில், 'ஐயா' என்ற அவலக் குரல் கேட்டது. மீண்டும் அதே குரல்! என் நடையில் கொஞ்சம் தளர்ச்சி கண்டது — ஆயினும் நிற்கவில்லை நான்.

தம்பி என்றது பழைய குரல்! எனக்கு ஒரே வியப்பு! இந்த 'சொர்க்கபுரி'யிலும கூடவா நமககு உறவு என்று, திகைப்போடுதான திருபபினேன்.

"எனன இராசா என்னைத்தெரியலையா?" என்று என் காலடியில் சொந்தத்துடன ஓர மனித உருவம பேசிற்று. திடுக்கிட்டுக் குனிந்தேன. அங்கே ஓர எலும்புக்கூடு! அதற்கும உயிர் இருந்தது! அசைவால் அதைக்காண முடிந்தது.

*

'நான்தான் இராசா...தெரியலையா...'

இந்நாட்டு மன்னரில் ஒருவன் மண்ணிலே படுத்துக் கிடந்தான். வங்கத்துச் சணல் ஆலையில் நெய்யப்பட்ட இரத்தினக்கம்பளத்தைச் சுருட்டித் தலையணை செய்து வைத்திருந்தான். பக்கத்தில் தகரக் குவளை, அதிலே பால் கலக்காத தேநீர் அமிர்தத்தில் கொஞ்சம் மீதி வைத்திருக்க, அதில் குளித்துவிட்டு 'சொர்க்கம்' சென்றுவிட்ட இரண்டு ஈக்கள் விறைத்துக் கிடந்தன.

நீண்டு வற்றிப்போன உடலைச் சுருட்டிவைத்திருந்த அந்த மனிதனின் தலை என்று சொல்லக்கூடிய பாகம் கொஞ்சம் பெருத்திருந்தது. அதிலிருந்த மயிர்கூடக் கசங்கிச் சுருண்டு கிடந்தது. ஒரு வேளை கிரீடத்தை வைத்திருந்ததாலோ என்னவோ, தலையின் முன்பகுதியில் நீண்டிருந்த மூக்கின் அடிவாரத்தில் வளர்ந்திருந்த களை வெட்டாத் தோட்டம்! தோட்டத்திற்கு நீர் கொடுக்கும் குளங்கள் இரண்டு சற்று மேலாகத் தள்ளி. அந்தக் குளத்திலிருந்து குதித்து வருவது போல், அக்கூண்டில் ஒட்டியிருந்த கண்கள் ஆர்வத்தோடு அகல விரிந்தது. நானும் சற்றுக் குனிந்தேன்.

"நான்தான் சொக்கன். அன்னைக்கு ரிக்ஷாவிலே வந்தீங்களே. மூணணா கேட்டதுக்கு நாலணா கொடுத்தீங்களே!"

அந்த எலும்புக்கூடு இழுப்பலோடு எழுத்துக்களைச் சிந்தியது. இணைத்துப் படித்து வார்த்தைகளைப் புரிந்துகொண்டேன்.

அந்த மன்னன் வாசலைப் பிரியன் போலும். அந்த வட்டாரத்தில் காசு கொடாமலே கிடைக்கும் 'சந்தனம், புனுகு, சவ்வாது, அத்தர்' அத்தனையும் ஒன்றாகக் குழைத்து பூசி இருப்பான் போலிருக்கிறது. சகிக்கமுடியாமல் மூக்கு முரண்டு செய்தது. சுற்று வட்டாரச் சூழ்நிலையோ, என்னை அங்கேயே முகாமிடச் சொல்லியது. கால்களோ எனது இருக்கை இருக்கும் திக்கு நோக்கி இழுத்துக்கொண்டிருந்தன.

யாரோ தெரிந்தவன் என்ற எண்ணத்தோடு கையில் வந்த நாலணா நாணயத்தை அந்த மன்னனுக்குச் செலுத்தவேண்டிய கப்பம் என வீசிவிட்டுத் துரித நடை போட்டேன்.

*

தெரு விளக்குகள் பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்தன. சாக்கடை நீரில் சலக்கிரீடை செய்துவிட்டு, சந்தனச் சோலையில் உலவப் போகும் தெய்வீகக் கொசுக்களின் தெம்மாங்கு நன்றாகக் கேட்டது. யானைக்கால் வரம் தரும் ஆண்டவன் பிரதிநிதிகளின் படையெடுப்பிலிருந்து தப்பிவிட வேண்டுமென்று விரைந்து சென்றன கால்கள். எதிரில் என்னை விட வேகமாக வந்தாள் ஒரு பெண்! அந்த வட்டாரத்துச் சூழ்நிலைக்கு அவள் ஒரு அழகிதான்!! என்னிடம் வந்து நின்றாள். எனக்கு, என்னவோ மாதிரியிருந்தது. கால்கள் சற்று நிதானித்தன.

**"அந்த ஆளைத் தெரியுங்களா!"**

அவள் கேள்வியில் பரபரப்புத் தென்பட்டது.

சாதாரண, கைத்தறிச் சேலை, அதிலும் இனிமேல் கையால் தையல் போட இடமில்லை. சாக்கெட்டோ, எல்லா நிறத் துணியையும் கொண்டு நெய்யப்பட்டிருந்தது. வாயோ, புகையிலையை மென்று மென்று திறந்தவுடன் குமட்டல் உண்டாக்க வைத்தது. என் மனம் பெண் இனத்தையே வெறுத்துக்கொண்டிருந்தது. என் நடை தொடர்ந்தது. சற்றுத் தூரம் சென்றதும், திரும்பினேன். அங்கே அந்தப் பேசும் பெண் மயில் பிரேதமாகிக்கொண்டிருக்கும் அந்த மனிதனிடம் நெருங்கினாள்.

* * *

உடல் வியர்த்து ஒழுகியது. இது என்ன பிசாசா.....இரவு இராணியா...அந்த எலும்புக் கூடா...!? பிசாசு என்பது மனதில் தெளிவில்லாமல், பயந்து அலைபவர்களின் மூளை பலவீனத்தால் காணும் கனவு உரு என்பார்கள். உண்மையாகப் பேயோ பிசாசோ இருப்பதாக எனக்கு நம்பிக்கை இல்லையே!—அப்படியானால் அந்த எலும்புக் கூடு! அதுதான் நடக்க முடியாதே...! 'ஆண்டவன்'தான் அதன் நடக்கும் சக்தியைப் பறித்துக்கொண்டு விட்டானே — பிறகு — இரவு இராணியோ...சேச்சே...பெண்கள் என்றாலே இப்படித்தானா தப்புக் கணக்குப் போடுவது...எதைப் பற்றியும் தீர முடிவு கட்ட முடியாத நிலையில் படுக்கையைத் தஞ்சமடைந்தேன். நடைபாதையில் பார்த்த அந்த எலும்பு மனிதன் திடீரென்று சினிமாவில் மாறுவதுபோல் மாறி, கட்டான உடலும், கம்பீரப் பார்வையும், கொத்தான மீசையும் வைத்துக்கொண்டு, பீடு நடை போட்டு வந்து என் அறைக் கதவைத் திறந்து உள்நுழைந்தான். கூடவே அந்தக் கோமளவல்லியும் வந்தாள். அவள்தான் அந்த எலும்புக் கூட்டை உரிமையுடன் தொட்டுப் புரட்ட அதிகாரம் பெற்றவள்போலும்!

நாற்காலியில் சாய்ந்தேன். சிந்தனை சிறகடித்துப் பறந்தது.

"பட்டணத்துக்கு வந்த நாள் முதல் எப்படியோவண்டி இழுத்து வயித்தைக்கழுவிக்கிட்டு இருக்கப் போதாங்க இந்தச் செல்வி வந்து சேர்ந்தா. இவ, வந்ததிலேருந்து கையிலெ கிடைக்கிறதை இவகிட்டே குடுத்துட்டு ஊத்தர கஞ்சியைக் குடிச்சுகிட்டு வந்தேனுங்க. கிராமத்திலே இருக்கப்போகூட ஒரு நிம்மதி. பாழாப் போன பட்டணம் வந்து கெட்டலைஞ்சு திருஞ்ச பின்னாடி, ஒரு நிலைக்கி வந்து நாலு காசைக் கண்ணாலெ பாக்கறப்போ இவ வந்தா. இவள் எனக்கு..."

அவன் பேச்சை இடைமறித்தபடி அந்தப் பெண் தோன்றினாள்.

"...வீட்டுக்காரி மாதிரி தாங்க இருந்தேன். வேளா வேளைக்கிக் காச்சி ஊத்தனுமின்னு நாட்டு வேணுமில்லெ. சம்பாதிக்க வக்கில்லாட்டா சாப்பாடு எப்படி வரும்?"


## "கன்னட நாடு"

கன்னட மாநிலத்தின் அரசியல், கலாசார, வரலாறுகளைத் தாங்கியும், தி. மு. க. கொள்கை விளக்க ஏடாகவும், மார்ச் 21-ல் "கன்னட நாடு" என்ற தமிழ் வார இதழ் வெளி வருகிறது.

விபரங்களுக்கு:-

**எஸ். வி. பதி**

கன்னட நாடு

டி. 101, மில் ரோடு, பெங்களூர் 2.

"...நானும் நாயைப் போலத் தாங்க ஒழச்சுப் போட்டேன். நாலு நாள் உடம்பு ஆகலேண்ணு படுத்ததும் என்ன ஏதுன்னுகூடக் கேட்காமே எவன் பின்னலோ ஓடிட்டா..."

"சுருக்கமாச் சொல்லிட்டாருங்க! நாலு நாள் பட்டினி...இவருக்கு வேறே மருந்து வாங்கிக் கொடுக்கணும் ... என்னங்க செய்வேன்...? இரவு இராணியோன்னு நெனச்சுடாதீங்க என்னே...வயிறு இருக்கு பாருங்க! அதாலே வெட்கம் மானம் எல்லாம் விட்டுப் பேசறேன் உங்ககிட்டே. ஏங்க என்னமோபோலப் பாக்கறீங்க; சொக்கன்கூட இருந்த சுந்தரி......பசிக்கான் கண்ணிலே பட்ட பழத்தோட்டம் மாதிரி என்னோட அழகு ஆபத்தா இருந்திச்சு. தண்ணி ஊற்றுத பூச்செடியாய் நான் இருந்தேன், வளர்ந்தேன்... பசி என்னே வாட்டியது...பணம் என்னைப் பார்த்துச் சிரித்தது. முதல் தடவை பரமன் என்னை பணத்தால் வென்றான்.

"...அடி பாவி! நீ, முன்னமேயே கெட்டுப்போனவதானா? ஐயோ! எசமான், கேட்டீங்களா இந்தக் காதகி சொல்றதை...... உன்னைப்போய் உத்தமின்னு நினைச்சேனே...ஐயா! என்னை முதல்லே பாக்கிறப்ப அப்படித் தாங்க சொன்னா..."

"அப்படித்தான் சொன்னேன்! உண்மையைச் சொன்னால் சம்மதிச்சிருப்பாருங்களா இவரு? கேளுங்க என் கதையை! நான் ஒண்ணும் மாடிவீட்டிலே பிறக்கலே. பிராட்வே சந்திலே மூட்டை தூக்கிப் பிழைச்ச முத்தனோட மகள்தான் நான். நான் வளர்ந்ததெல்லாம் பிராட்வேயிலே உள்ள தெருவிலேதான்! வயசு வர்றதுக்கும் எங்கப்பன் சாவுறதுக்கும் சரியாயிருந்துச்சு... அந்த வயசிலே ஒரு வீட்டிலே வேலைக்காரியாகப் போனேன். அந்த வீட்டு டிரைவர்தான் பரமன்.

பரமனோடு வாழ்ந்தேன்-பத்தினியாக வல்ல; சமயம் கிடைக்கும் போது சுவைக்கும் கனியாக! பல மாதங்களுக்குப் பின் என் வயிறு பெருத்தது. பரமன் மறைந்துவிட்டான் என் கண்ணிலிருந்து. கரு சிசுவாக விளையாடியது. வயிறு வாடியது. குழந்தை பாலுக்காகக் கதறியது. இரண்டாவதாகக் கச்சாப்புக்கடை கந்தன் எனக்குக் கண்ணி வைத்தான். நானும் ஒப்பினேன். கண்மணி வளர, என் வயிறும் வாழ்ந்து தீரவேண்டிய கட்டாயத்தில். பிறகு ஏனோ கந்தன் என்னை வெறுத்தான். நானும் ஆண்களைச் சபித்தேன். ஒருநாள், என்னை வாழத் தூண்டிய கண்மணி என்னை பிரிந்துவிட்டு இறப்புலகுபுகுந்தான், நான் புலம்பினேன்—இனி ஏன் வாழ்வு என்று சாகத் துணிந்தேன். சட்டம் என்னை மூன்று மாதம் உட்கார வைத்துச் சோறு போட்டது. நான்காவது மாதம் வெளியில் வந்தேன். எனக்கு என்ன தொழிலுங்க தெரியும்? தெரிஞ்சது, ஒரே ஒரு தொழில்தான்!

அப்போதுதான் "லோன்ஸ் கொயரில்" இந்த ஆளின் தொடர்பு ஏற்பட்டது...... ரிக்ஷா இழுத்துக்கொண்டு வரும். பேச்சு வளர்ந்து, நேசம் ஏற்பட்டு, தினசரி இது கொண்டாந்து கொடுக்கும் காசைக்கொண்டு அரிசி உப்பு வாங்கி சமைச்சுப் போடுவேன்... அங்கேயுள்ள மரத்தடிதான் எங்க மாளிகை! ஒரு நாள் இது காயலா விழுந்துது..."

"அதுக்காக இவ, என் கண்ணெதிரேயே இன்னொருத்தனோடு பேசுவதா?"

"அதிலே என்ன தப்புங்க?"-அவள் கேட்ட கேள்வி, என்னைத் திடுக்கிட வைத்தது! எவ்வளவு சாதாரணமாகக் கேட்கிருள்!! ஐயயோ ......என்று திகைத்தேன். என் கனவு, கலைந்தது... திடுக்கிட்டுப் போய்த்துள்ளியெழுந்தேன். சுவரிலிருந்த கடிகாரம் ஏழடித்தது.

எலும்புக் கூட்டுச் சொக்கன் என் எண்ணத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தான். மீண்டும் அவனைக் கண்டு ஏதாவது உதவி புரிந்து சாவிலிருந்து மீட்க வேண்டும் என்ற இரக்க எண்ணம் என்னை உந்தக் கிளம்பினேன்.

*

எனக்கு முன்னால் எனது எண்ணங்களைச் சொக்கனிடம் விட்டிருந்ததால், வழியில் வந்தவர்களையோ முன்தினம் அனுபவித்த கொடுமை மிகும் மணத்தையோ நுகர வாய்ப்பில்லை. வில்லிலிருந்து விடுபட்ட அம்பு இலட்சியத்தை அடைவதுபோல் நானும், இந்நாட்டிலே ஆளப்பிறக்காவிட்டாலும் வாழப் பிறந்தவனல்லவா? வாடிக் கிடந்த சொக்கன் இருந்த இடத்தை அடைந்தேன்.

அங்கே நகராட்சி வண்டி நின்றிருந்தது. இருவர் சொக்கனின் திருமேனியைத் தொட்டுத் தூக்கி வண்டியில் போட்டனர். ஒருவன் முன்பக்கம் இழுக்க, பின்னால் ஒருவன் தள்ள, ஒரு மன்னனின் இராசபவனி ஆரம்பமாகியது. வண்டிக்குள்ளிருந்து வந்த வாடை, பாதை செல்வோரின் கவனத்தைத் திருப்பப் பராக்குக் கூறியது. இந்த அமர்க்களங்களையெல்லாம் பொருட்படுத்தாமல், சொக்கனுக்கு வீட்டுக்காரிபோல இருந்து பணிவிடை பல புரிந்து உயர்ந்த உத்தமி, சொக்கன் கிடந்த இடத்தில் எதையோ தேடிக்கொண்டிருந்தாள். பரபரப்போடு உற்றுப் பார்த்து எதையோ எடுத்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி ரேகை படர்ந்தது. அவள்கையில், நேற்று நான் விட்டெறிந்த நாலணா நாணயம் பளபளத்தது!!

★

## பனியன் தொழில்!

திருப்பூர் நகரில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பனியன் தொழிலையே நம்பி வாழ்பவர்களாயிருப்பதுடன், அவர்கள் வாழ்வு பின்தங்கியிருப்பதை ஒழுங்குறச் செய்ய, வாழ்க்கைத்தரம் உயர அரசியலார் உடனடியாக விசாரணைக்குழு ஒன்றினை அமைக்கவேண்டுமென்று அரசியலாரை பழனி தி. மு. க. மாநாடு வற்புறுத்துகிறது.

# பொருந்தா வாழ்வில் பொலிவேது?

—[ அன்பு ]—

மனை மாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனை மாட்சித் தாயினும் இல்

வாழ்க்கைத் துணை நலத்தைப் பற்றிக் கூறும்போது வள்ளுவர் இவ்வாறு கூறுகின்றார். ஒருவனது வாழ்க்கை வெளியுலகில் எவ்வளவுதான் சிறப்புடையதாக இருந்தாலும் அவன் இல்லாளிடம் தக்க நற்பண்புகள் இல்லையானால் எவ்வித பயனுமில்லை.

யாரேனும் ஒருவர் வருத்தமாக இருந்தாலும் உடனே, புரிந்து கொண்டவர்கள்போல் "என்ன சார்? வீட்டில் ஏதாவது மனக் கஷ்டமா?" என்றுதான் கேட்கிறார்கள்! இவ்வாறு வீட்டரசிகளைப் பொறுத்துத்தான் இருக்கிறது வீட்டரசர்களின் வெளியுலக வாழ்க்கை!

தன் கணவன் புகழைக் கட்டிக் காக்க முயலும் மனைவியில்லாதவர்கள் பகைவர் முன் ஏறுபோல் பீடு நடை போட முடியாதென்கிறார் வள்ளுவர். இத்தகைய "பண்பு"டைய மனைவியரைப் பெறும் வாய்ப்பு உலகம் புகழும் இருவரான சாக்ரடீசுக்கும் ஆபிரகாம் லிங்கனுக்கும் கிடைத்திருந்தது! இவர்கள் தங்கள் மனைவியரால் அடைந்த இன்னல்கள் சொல்லிலடங்கா. அதிலும், லிங்கன், சாக்ரடீசைவிட இத்தகைய "பெறற்கறிய பேறு"களை அதிகமாகப் பெற்றிருக்கிறார்.

சாக்ரடீசின் மனைவி எக்சேந்திபிக்கு அவரது பகுத்தறிவுப் பிரச்சாரமெல்லாம் துளிகூடப் பிடிக்காது. முத்தின்மதிப்பைச்சிப்பியா அறியும்? அதுபோல எக்சேந்திபி எங்கே அறிந்திருக்கப் போகிறாள் தன் கணவன், உலகம் என்றென்றும் புகழும் ஒரு அறிவுலக மேதையாகப் போகிறாரென்று! அவர் ஒரு சமயம் தெருவில் நின்றுகொண்டு பகுத்தறிவுக் கொள்கைகளை நாட்டு மக்களுக்குப் பரப்பிக் கொண்டிருக்கும் போதுதான், எக்சேந்திபி, அவர் மீது வீட்டுக் குப்பைகளையெல்லாம் வாரிவந்து கொட்டினாள்! நாட்டு மக்கள் மனத்திலிருந்த குப்பை கூளங்களையெல்லாம் போக்கத் தன் காலம் முழுவதும் பாடுபட்டு அதற்காகவே இறந்த அவர்மீது உண்மையான குபபை கூளங்களே கொட்டப்பட்டன! அவரோ அதையெல்லாம் பொருட்படுத்தாது தன் பகுத்தறிவுப பணியை தொடர்ந்து நடத்தினார்.

சாக்ரடீசைவிடச் சிறிது அதிகமான 'அனுபவ'த்தையே பெற்றிருக்கிறார் லிங்கன், தனது மனைவி 'மேரி டோ'டிடம் லிங்கனும் மேரியும் முதன் முதல் சந்தித்த நாள் அமெரிக்க சரித்திரத்திலேயே 'துரதிருஷ்டமான' நாளாகும்! தனக்குத் திருமணமானவுடன் லிங்கன் தனது முக்கிய நண்பரொருவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாவது: "இங்கு என் திருமணத்தைத் தவிர வேறொன்றும் எனக்கு பெரிய ஆச்சரியமாகத் தோன்றவில்லை!"

லிங்கன் மேரியை மணந்து சுமார் 20 ஆண்டு காலம்வரை அவளால் பல மனத் துன்பங்களை அனுபவித்திருக்கிறார். என்று மேரியை மணந்தாரோ அன்றிலிருந்தே அவருக்கு எப்போதும் கவலைதான். வெளியுலகில் அரசியல் சமுதாயப் பிரச்சனைகளையெல்லாம் தன் அறிவுக் கூர்மையால் அமைதிக்குக் கொண்டுவந்த லிங்கனால் தன் மனைவியிடம் ஒத்து வாழ முடியவில்லை! லிங்கனின் மிக மிக முக்கிய நண்பரான வில்லியம் ஹெர்ன்டன் என்பவர் லிங்கனைப் பற்றி மிகவும் பரிதாபப் பட்டு ஒரு சமயம் கூறியிருப்பதாவது: "லிங்கனது முழுக் கவலைக்கும் கார்ணம் அவரது மனைவி மேரிதான்!

டேல் கர்னேகி என்பவர் லிங்கனது சுயசரிதத்தினை எழுதுவதற்காக மூன்று ஆண்டுகள் கழித்தார். லிங்கனது வாழ்க்கை முழுவதையும் துருவித் துருவிப் பார்த்து அவர் கடைசியில் கண்டது அவரையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அந்த ஆச்சரியத்திற்குக் காரணம் என்னவென்றால் லிங்கனது வாழ்க்கையிலேயே துன்பமான நாள் அவருக்குத் திருமணமான நாள்தானாம்! தனக்குத் திருமணம் என்று சொன்னவுடனேயே மகிழ்ச்சியால் உடல் பூரிக்கும் மனிதர்களை நாம் கண்டிருக்கிறோம்! ஆனால் லிங்கனது வாழ்வோ இப்படி இருந்திருக்கிறது!

இப்படி லிங்கனது இல்வாழ்க்கை துன்பமாக அமைந்திருந்ததற்குக் காரணங்களைச் சுருங்கச் சொன்னால், லிங்கனும் மேரியும் எந்தத் துறையிலும் இரு வேறு முனைகளில் இருந்ததே முக்கிய காரணமாக இருந்திருக்கிறது. உணவு முதல் உடை வரை, பேச்சு முதல் பழக்க வழக்கங்கள்வரை இருவரும் எதிர் எதிர் துருவங்கள்!

லிங்கன் தன் வாழ்க்கையில் பள்ளிக்கூட வாசலை மிதித்தது 12 மாத காலம்தான்! ஆனால் மேரியோ நன்கு படித்தவள — ஆதலால் ஓரளவு புகழும் உடையவள். பிரெஞ்சு மொழியை நன்கு பேசுவாள்.

மேரியின் பெற்றோர் பரம்பரையினர், அரச பரம்பரையினரோடு நெருங்கிய தொடர்பும் உறவும் கொண்டவர்கள். முன்னோர்களில் சிலர் அரசியலில் உயர்ந்த பதவிகளில் இருந்திருக்கின்றனர். ஆனால் லிங்கனது குடும்பமோ அப்படிப்பட்டதல்ல—மிக எளிய குடும்பம். முன்னோர்களோ சுற்றத்தார்களோ பதவி என்றால் என்ன என்றே தெரியாதவர்கள்!

மேரி, ஆடம்பரத்தையும், உயர் நாகரிகத்தையும் விரும்புபவள். தன் உடை, அழகு முதலியவற்றில் அதிக கவனம் செலுத்துவாள். ஆனால் லிங்கனோ அதற்கு நேர்மாறானவர். தன் உடை, உடல் முதலியனவற்றின்மீது கவனம்சிறிதளவுகூடச் செலுத்தமாட்டார்! சில சமயங்களில் அவரது முழுக்கால் சட்டையின், ஒரு கால் பகுதி பூட்சின் உள்ளேயும் ஒரு கால் பகுதி பூட்சுக்கு வெளியேயும் இருக்கும்போதுகூட அதையெல்லாம் கவனியாது தெருவில் நடந்து செல்வாராம்!

மேரிக்கு உணவு வகைகளைப் பொறுத்த வரையில் மிக ஆடம்பரமானவையாயும், மிகச் சுத்தமானவையாயும் இருக்கவேண்டும். ஆனால் லிங்கனுக்கோ மிக எளிய உணவு இருந்தால்கூடப் போதும்!

மேரி, பொறுமை, அவசரத் தன்மை, முன்கோபம் அத்தனையும்கொண்டு விளங்கினாள். ஆனால் அவரோ, பொறுமை, சகிப்புத் தன்மை அன்பு இத்தகைய குணங்களோடு அவளை வெல்லாமல் வென்றார். அவள் இத்தகைய குணங்களோடு லிங்கனுக்கு இழைத்து வந்த மனத் துன்பம், இன்றும் அவரது சரித்திரத்தைப் படிப்பவர்க்கு அவள் மீது அருவருப்பையும் அவர்மீது அன்பையும் எழச்செய்கிறது!

இருவரும் தம்பதிகளாவதற்கு முன், காதலர்களாக இருந்த போது, லிங்கன் ஒரு சமயம் தான் மேரியைத் திருமணம் செய்து கொள்ளுமளவிற்கு விரும்பவில்லை என்பதைக் கடிதம் மூலம் எழுதித் தன் நண்பரொருவனிடம் கொடுத்துக்கொடுக்கச் சொன்னார். ஆனால் அந்த நண்பனோ கடிதத்தைக் கிழித்து நெருப்பில் போட்டுவிட்டு லிங்கனை நேரிலேயே சென்று சொல்லிவிடுமாறு சொல்லிவிட்டான்! லிங்கனும் துணிவை வரவழைத்துக் கொண்டு மேரியிடம் சென்று தன் எண்ணத்தைச் சொல்லிவிட்டார்! ஆனால் மேரியோ அவர் கூறியதைக் கேட்டு 'கோ' வென்றழுது கண்ணீர்விட ஆரம்பித்துவிட்டாள்! அவளது கண்ணீர் லிங்கனது இதயத்தை உருக்கிவிட்டது. ஆதலால், தான் அவ்வாறு கூறியதற்கு மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டு அவளை மணந்து கொள்வதாகவும் வாக்களித்தார்.

1841 ஜனவரி 1ந் தேதிதான் லிங்கன் மேரியை மணக்க இருந்த நாள்! விருந்தினர்கள் எல்லோரும் வந்துவிட்டனர்! பாதிரி வந்து காத்துக்கொண்டிருக்கிறார்! மணப்பெண் வந்தாயிற்று! 'மாப்பிள்ளை எங்கே?' இந்தக் கேள்வி எங்கும் பரவியது! "பைத்தியம் எங்காவது போயிருக்கும்" — இது மேரியின் சகோதரி லிங்கனுக்கு அப்போது கொடுத்த 'பட்டம்'! லிங்கனோ அந்த நேரத்தில் ஓர் அறையில் மன நோயால் உடல் நோயும் சேர்ந்து, இரண்டு நோய்களாலும் தாக்கப்பட்டுக் கிடந்தார்.

இந்தச் சமயத்தில்தான் லிங்கன் துன்பத்தின் கடைசி வரம்பிற்கே சென்றுவிட்டார் முடிவு? தற்கொலையைத்தேடிக்கொள்ள முயற்சித்தார்! அவரது நண்பர்கள் அவரிடமிருந்த கத்தியைப் பிடுங்கி வைத்துக்கொண்டனர். அந்தச் சமயத்தில் மட்டும் அவரது நண்பர்கள் தடுத்திருக்காவிட்டால்......?

"என்னைப்போன்று துன்பத்தை இவ்வுலகில் எவரும் அனுபவித்திருக்கமாட்டார்கள்! எனவே இனி இவ்வுலகில் இருக்கமுடியாது! இருக்கவும் கூடாது!!" இந்தச்சொற்கள் லிங்கனது துயர வாழ்வின் விளைவாக அவரது பேனமுனை அவர் உயிர் நண்பர் ஒருவருக்கு எழுதியது.

இந்த வாழ்க்கையே இரண்டாண்டு காலம் நீடித்தது. கடைசியில் அவரது சொந்த ஊரான ஸ்பிரிங்ஃபீல்டு நண்பரொருவர் மேரிக்கும் லிங்கனுக்கும் தக்க அறிவுரை கூறி இருவரையும் ஒன்று கூட்டி வைத்தார்!

மேரியின் முன்கோபத்திற்கும் லிங்கனது அளவுக்கு மீறிய பொறுமை மனப்பான்மைக்கும், இருவர்களிடையேயும் நடந்த ஒரு நிகழ்ச்சி ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஒரு நாள் காலை லிங்கனும் மேரியும் இன்னும் உள்ளவர்களும் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தார்கள். லிங்கன் சொல்லிய ஏதோ ஒரு சொல் மேரிக்குப் பெரும் முன்கோபத்தை உண்டாக்கியது. அவ்வளவுதான்! பொறுமையிழந்தாள்! நிதானமிழந்து தன் கையிலிருந்த காப்பியை அப்படியே லிங்கனது முகத்தில் ஊற்றிவிட்டாள்! சாதாரண மனிதர்களுக்கு அவ்வாறு நடந்திருந்தால் உடனே அவ்விடத்தில் படபடவென்று அடியும் உதையும், ஒரு பெண்ணின் அழுகுரலும்தான் கேட்டிருக்கும்! ஆனால் லிங்கனோ அந்த இடத்தில் சூடான காப்பி வழியும் முகத்துடனும் தனக்கே உரித்தான பொறுமைக் குணத்தோடும்தான் உட்கார்ந்திருந்தார்! அருகிலிருந்த ஒருவர் அவர் முகத்தில் வழிந்துகொண்டிருந்த காப்பியைத் துடைத்துவிட்டு முகத்தையும் கழுவிவிட்டாராம்!

இப்படிப்பட்ட துயர வாழ்க்கையை ஒரு ஆண்டு இரண்டு ஆண்டல்ல, இருபத்து மூன்று ஆண்டுகளில் அவர் தன் மனைவியிடம் கையாண்ட ஒரே குணம் பொறுமை. இவ்வளவு பொறுமையுடன் இருந்தும் அந்த இல்லத்தரசி திருந்தினாளா என்றால் இல்லை! மலரோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பது உலகியல் வழக்கு. ஆனால் லிங்கனோடு சேர்ந்த மேரி மட்டும் அதற்கு விதிவிலக்கு!

இத்தகைய பெண்டிர்களை மனதில் கொண்டுதானோ என்னவோ வள்ளுவர், "நல்ல பண்புடைய இல்லாளையுடைய வாழ்க்கையில் எவ்வித குறையும் இல்லை" என்று கூறிப் பின்னர் இல்லாளிடம் நற்பண்பு இல்லையாயின் வாழ்க்கையில் என்ன இருக்கிறது? (ஏதுமில்லை) என்ற விடை பொதிந்த வினவை எழுப்பியிருக்கிறார்.

**இல்லதென் இல்லவள்மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணக் கடை.**

★


## "கலை"

தோழர் ஏ. பாலு (பாலுபிரதர்ஸ்) அவர்களை ஆசிரியராகக் கொண்டு "கலை" என்ற திங்கள் இதழ் விரைவில் வெளி வர இருக்கிறது.

# ★ முளைக்காத விதை! ★

"கொள்ளு விளையும் இடம்! கொள்ளுங்கள் இதனை நீங்கள்!!" என்று சொல்லி, அன்போடு தந்தனராம் அந்த இடத்தை. அங்குதான் எழும்பியிருந்தது, கண்ணையும் கருத்தையும் கவர்ந்த பழனி மாநாட்டுப் பந்தல்.

"பார்க்கப் பரமானந்தமே! பஞ்சாமிர்தம் மிக நேர்த்தியே!!" என்று பாடியபடி செல்லும் பக்தர்களின் திருக்கூட்டத்தை மட்டுமே இதுநாள்வரை கண்டிருந்த அப்பெருமூதூர், கடந்த கிழமை கழகத்தவர் உலாவரும் உன்னதக் காட்சியைக் கண்டது. 'தந்தையை மிஞ்சிய தனயனும் குமரன்' இருக்கின்ற அக்கோட்டத்துக்கு காவடி எடுப்போரும், கந்தா—கடம்பா—முருகா என கூச்சலிடிவோரும் மட்டுமே இதுநாள்வரை செல்வர்; கூடுவர். கடந்த கிழமையோ காவடி தூக்கும் போக்கு மதத்துறையில் மட்டுமின்றி அரசியலிலும் இருப்பதைக் கண்டித்து — வளர்க அறிவு! வருக திராவிடம்! வாழ்க தாயகம்! எனும் முழக்கமிடும், விடுதலைபுரியின் ஒப்பற்ற வீரர்கள் கூடினர். திரும்புமிடமெல்லாம் மக்கள் வெள்ளம்! சின்னஞ்சிறு குழந்தைகளைத் தோளிலும் மடியிலும் சுமந்த வண்ணம் வந்திருந்த தாய்மார்கள் பல்லாயிரம்! உழைத்துழைத்து உரமேறிய உடற்கட்டும், அதைவிடச் சிறந்த மனக்கட்டும் வாய்ந்த பழங்குடி மக்கள் புதியதோர் ஆர்வத்தோடு கூடிக்கிடந்தனர்! சாத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள், அவிழ்த்து விடப்பட்டுக்கிடந்த நாட்டு வண்டிகள், பார்வைக்கு விருந்து! ஊரோ, விழாக்கோலம் பூண்டுகிடந்தது. எங்கெங்கு நோக்கினும், வளைவுகளும் தோரணங்களும்தான்.

நாஞ்சில் தந்த இளைஞரேறு மனோகரன் தலைமை வகிக்க, நடிப்புச் செல்வம் புரட்சி உரு எம்.ஜி. இராமச்சந்திரன் துவக்கிட நடைபெற்ற மாநாட்டுக்குத்தான் இவ்வளவு ஏற்பாடுகளும். குன்றுகளும், கனி தரும் மரங்களும், வாழவைக்கும் வயல்களும் நிரம்பிய மாவட்டம் மதுரை. அங்கே, குன்றெடுக்கும் நெடுந்தோள்கள், வருவோரை உபசரிக்கும் கனிச்சோலைகள், விலைமதிக்கவொணாத முத்து, பயன் கருதாமல் பலன் தரும் கழனிகள், இருப்பதுபோன்று கழகத்திலும் இருக்கிறார்களன்றோ, ஆர்வமும் அன்பும் நிரம்பிய உழைப்பாளர்கள்! வரவேற்புக் கழகத் தலைவர் முத்து, — செயலாளர்கள் பி. எஸ். சேக், தா. ஆவுடையப்பன், பொருளாளர் எஸ். எஸ். இராசேந்திரன், தொண்டர்படைத் தலைவர்கள் கா. வெங்கடாசலம், பா. சீனி ஆகியோரின் திறனும் செயல் வன்மையும் நம்மைப் பாண்டிய மண்டலத்தையும், அதனைப் பெற்றிருக்கும் திராவிடத் திருநாட்டையும், அது அடிமைப்பட்டுக் கிடப்பதையும, விடுதலை பெறத் துடிக்கும் வீரக் காளையரையும் நினைத்து நினைத்து மகிழச் செய்தது.

'ஏதோ அடுக்குச் சொல்லில் பேசுகிறார்கள்! அதனால் நகரங்களில் பலர்கூடுகிறார்கள்!!போய்ப் பார்க்கட்டும் கிராமத்துக்கு. விவசாயிகள் விரும்புவார்களா, இவர்களை? நாட்டுப்புறத்தார் நத்துவரோ இவர்தம் கழகத்தை!!", என்று, கேலி பேசுவோர் உண்டு, நம்மைப் பற்றி. அவர்கள், பழனி வந்திருக்க வேண்டும்—கண்டிருக்கலாம், கொள்ளு விளையும் இடத்தை மாநாடு போடக் கொள்ளுங்கள் என்று கூறியதோடு மட்டுமின்றி, எம்மையும் கொள்ளுங்கள் எனச் சொல்லி, கூட்டங் கூட்டமாகக் கூடிநின்ற பல்லாயிரக்கணக்கான உழவர் பெருமக்களை!!

திருவண்ணாமலை - நாகர்கோயில் — வேலூர் (சேலம்) — தேவகோட்டை—இப்போது பழனி! கடந்த சில திங்களுக்குள்ளே, இந்த ஐந்து இடங்களிலும் தொடர்ந்து நமது மாவட்ட மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன!! ஒவ்வோரிடத்திலும், ஒவ்வொரு புதுமையும் எழுச்சியும் கண்டோம். செட்டிமார் நாடு, பழமைக்குப் பெயர் போனது—பாபிகள், எனச் சபிப்பார்கள் என்ற காலம் மாறி, தேவகோட்டை நகரசபை நமது தலைவர்களுக்கு வரவேற்பு வழங்கிற்று! பழனியில், நகர மன்றத்துக்கு ஒரு பூங்கா திறந்துவைக்கும் நிகழ்ச்சி நம்மால் நடத்தப்பட்டது!! உழவர்களும், பாட்டாளிகளும் மட்டுமின்றி; ஒதுங்கி நின்றோரும், சந்தேகக் கண்களால் நம்மைப் பார்த்தோரும், மதித்திட மறுத்தோரும், நினைப்பதே பாபமெனக் கருதியோரும், இன்று நம்மிடம் வருகின்றனர்; நமது பணியின் பலனை உணருகின்றனர்; ஆசிர்வதிக்கின்றனர்; அன்புடன் வரவேற்பும் வாழ்த்தும் அளிக்கின்றனர்.

பத்தாண்டுக்குள்! — ஒரு கட்சிக்கு, இவ்வளவு வளர்ச்சியா, என்றே எண்ணத் தோன்றும், எவருக்கும். எதிர்பாராத இடங்களிலெல்லாம் கழகம் சென்றிருக்கிறது. அதுவும் கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இந்திய துணைக்கண்டத்தின் பல பகுதிகளிலெல்லாம் தி.மு.க.வின் குரல் கேட்க ஆரம்பித்திருக்கிறது. பழனியில் நமது தலைவர்கள் விடுதலைமுரசைத் தட்டினர். சற்றேறக்குறைய அதே கிழமையில் கல்கத்தாவிலே, தி. மு. க.வின் குரல் ஒலித்தது! அங்கே நடைபெற்ற இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டிலே, நமது சம்பத்தும், வி. பி. இராமனும் கலந்துகொண்டு, மாற்றாருக்கு நம்மையும் நமது உரிமை வேகத்தையும் உணர்த்தியிருக்கின்றனர். அங்கு சென்ற ஆச்சாரியாரும் நமது இந்தி எதிர்ப்பைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டே, பேச ஆரம்பித்திருக்கிறார். சில தினங்களுக்கு முன் கண்டோம், சீக்கிய நாட்டுத் தலைவர் தாராசிங், நமது கழகம் பற்றிக் கொண்டிருக்கும் ஆர்வம் எவ்வளவென்பதை. நாகநாட்டினரும், மராட்டியரும், நமது கழகம் குறித்து அறியக் காட்டிடும் ஆசையினைச் சம்பத்தும், தர்மலிங்கமும் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றனர்! நமது ஒரே ஒரு ஆங்கில ஏடு "ஹோம்லண்ட்" விரும்புவோருக்கு விளக்கம் தர, பார்லிமெண்டு வட்டாரத்திலே, பவனி வருகிறதாம் பெருமிதமாக!

*

கல்லூரிகளிலே கழக மணம்! சொல்லேருழவர்தம் அரங்கிலே நம் கொள்கைக்கோர் மதிப்பு! பாட்டாளிகளின் இல்லிலே கழக

மெனும் பெய்ரே அறுசுவை யுண்டி எனக் கருதப்படுகிறது! இருள் மூடிக் கிடந்த காலம் மாறி, ஒளி பரவுகிறது, இப்போது! இருட்டடிப்புச் செய்த ஏடுகளே, நமது செய்திகளைப் போட ஆவல் கொள்ளுகின்றன! "இவர்களோ? வகுப்பு வாதிகள்! பார்ப்பனத் துவேஷிகள்! மனித மாண்பை மறந்தவர்கள்!", என்று தூற்றப் பட்டது மாறி, உண்மையில் சாதி சமயம் எனும் சதிகார முறையை முறியடிக்கும் கழகம் என்கிற உண்மை, அறியப்பட்டு வருகிறது பலராலும்.

நாடெங்கும் கழகத்தின் இரு வண்ணக் கொடி பறக்கிறது! வீடெங்கும், நாம் வளர்க்கும் தமிழ் முழங்குகிறது! நாள்தோறும் பல இடங்களில் — குமரி முதல் சென்னை வரை—நமது குரல் ஒலிக்கிறது! ஆண்டு தோறும் நடைபெறும் மாநாடுகளோ கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றன!!

தோள் தட்டுவோருண்டு, சுடர் முகம் தூக்கி வாதிடும் வாலிபர்கள் ஏராளம்; திண்ணைகள் — அரச மரத்தடி — குளக்கரை — டீக் கடை — வெற்றிலைப் பாக்கு வைத்திருப்போர்—கூடை தூக்கி வியாபாரம் செய்வோர் — வண்டி இழுப்போர் வியர்வையைத் துடைத்துவிட்டு உட்காரும் வீதி —இப்படிப்பட்ட இடங்களிலெல்லாம், கழகத்தைப் பற்றிய வாதமும் விளக்கமும் கேட்கிறது! இந்த எழுச்சியை நாம் மனதார உணர்வதால்தான், அடிக்கடி பெருமிதத்தோடு சொல்கிறோம், "கழகம் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேர்விட்டு" வருகிறது என்று! நாம் இப்படிச் சொல்கிறோம்—நாடும் இவ்வண்ணம் கருதுகிறது—ஆனால், நமது மதிமுக நிதியமைச்சர் சட்டசபையிலே, 'முளைக்காத விதை' யென்றார்! நமது கொள்கைகள் முளைக்காத விதையாம்!!

"முளைக்கின்ற விதையா, முளைக்காதவிதையா என்பது விதையை வைத்திருப்பவர்களுக்குத் தெரியும். அந்த விதையைப் பற்றித் தெரியாதவர்களுக்கு என்ன புரியும்?", என்று உடனே நமது தரப்பில் பதில் தரப்பட்டது! அதற்கு, மறுமொழி சொல்லவில்லை அமைச்சர்! — எனினும் பேச்சு முடியும்போது, அதே பல்லவியைப் பாட மறக்கவில்லை —ஒருபோதும் வளராது! ஏனெனின் அது கெட்டுப்போன விதை! முளைக்காத விதை!—என்பதாக.

கண்ணெதிரே 17 இலட்சம் வாக்காளர்களின் பிரதிநிதிகளென அமர்ந்திருக்கின்றனர், பதினைந்து தி. மு. க.-வினர். இருந்தும் சொன்னார், இவ்விதம் அமைச்சர்! முளைக்காத விதையா, 17 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கும்? முளைக்காத விதை என்பதாலா, நமது கழக எம். எல். ஏ.-க்களின் பணியினைக் கண்டு பயமேற்படுகிறது அமைச்சர் குழாத்துக்கு? சட்டசபை விவாதத்திலே பங்கெடுத்துக் கொண்ட தி. மு. க. உறுப்பினர்களின் வாதங்களை ஒருமுறை படித்துப் பார்த்தால் தெரியும்! முளைக்காத விதையா, அள்ளி யள்ளி விசுகிறது ஆதாரங்களை? ஆதாரங்களை மட்டுமா, அரசினர் அச்சடிக்கும் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் ஆங்கிலத்தில் ஒன்றும் தமிழில் ஒன்றுமாக இருந்த புள்ளிவிபரத் தவறையுமன்றோ எடுத்துக் காட்டிற்று தி. மு. க.? "உண்மைதான். தவறுக்காக வருந்துகிறேன்", என்று தலையை அன்றோ குனிந்தார், கனம். முளைக்காத விதையா, அவர்கள் மூளையில் படாததை எடுத்துரைத்து உணர்த்திற்று?

போட்ட விதை முளைக்கிறது—தழைக்கிறது — பிரிவினைக் கொள்கை பரவுகிறது என்று நமது தரப்பில் சொன்ன உதாரணத்தை எடுத்துக்கொண்டு, அமைச்சர், அந்த விதை முளைக்காது, ஏனெனில் அது முளைக்கவே முளைக்காத விதையென்று முத்தாய்ப்பு வைத்துவிட்டார்.

*

சபிப்பதற்கு, ஆத்திரமட்டும் போதும் — நிலைமையை யுணர்வதற்கு விவேகம் வேண்டும். ஆத்திரம் அரசோச்சும்போது, விவேகம் விலகிவிடும். அமைச்சர், அவர்! நாட்டின் நன்மை தீமைகளில் பெரும் பங்கு கொண்டவர்! நல்லவர்—பாடுபடுகிறவர் — படித்தவர்—என்று பலரால் பாராட்டப்படவேண்டிய பொறுப்பும் இடமும் பெற்றிருப்பவர்! அப்படிப்பட்டவரிடம், ஆத்திரத்தை எவரும் எதிர்பார்க்கமாட்டார். அரிப்பு எடுக்கும்போது, சொரி சொரியென்று சொரிந்து விட்டுவிடலாம்! அதுவும் கையில் நகம் இருக்கிற தெனும் தைரியம் இருக்கும் போது, அரிப்பு அடங்கும் ஆத்திரத்தில் இரத்தம் வரும் வரையில், சொரிந்துவிடலாம்!! ஆனால், அரிப்பு அடங்கிய பிறகு? கஷ்டம் உடம்புக்குத்தான்! அதனால் ஏற்பட்ட புண் மறைய, வேறு பல வழிகளை நாட நேரும்!! எனினும், அந்த நேரத்து ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ள, அமைச்சர், முளைக்காத விதையென்று சபித்தார்-ஆத்திர மயமான வார்த்தைகளைக் கொட்டினார்.

அவருக்காக நமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேசமயத்தில், கழகத்தவருக்கும் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். கழகம், போட்ட விதை எப்போதோ முளைத்து விட்ட தென்பது அறிவீர்கள் நீங்கள்-ஆல்போல், அதன் கொள்கைகள் பரவிடும் வேகமும் உணர்வீர்கள். அமைச்சரோ, அல்லது அவர்தம் சகாக்களோ, ஆத்திரத்தில் என்ன சொன்னாலும், எரிச்சலோ கோபமோ கொள்ளாதீர்! அதற்குப் பதில் ஆர்வத்தையும் வேகத்தையும் கழக வளர்ச்சிக்காக்குங்கள். 'பழனி'களை, மென்மேலும் காட்ட முற்படுங்கள்.

எதிர்த்துப் பேசிய யாராரோ இன்று நம் கூடாரம் நோக்கிப் பார்வையைத் திருப்புகிறபோது, இந்த அமைச்சர் மட்டும் என்ன விதிவிலக்கா! இவர்—முளைக்காத விதையென்கிறார். இவர், குருநாதர் ஆச்சாரியாரோ, 'எறும்பு' என்றார்—'கொசு' என்றார். இப்போது...? தேய்த்தால் போதும், ஒழிந்து விடும் என்று கருதிய இந்த எறும்பைப்பற்றி, 'கல்கத்தா'வில் போயன்றோ, பேசுகிறார்! அந்தக் கட்டத்துக்கு குருநாதரே வந்திருக்கிறபோது, சீடரைப் பற்றிச் சொல்லவாவேண்டும்!!

சட்ட சபையில் பதிலளிக்க வேண்டும் என்பதற்காகவாவது, அமைச்சர் நமது நூல்களை எடுத்துப் படிக்க ஆரம்பித்திருக்கிறார். இது வளர்ந்தால்.....!!

பதில்தான், உங்களுக்கே தெரியுமே.

★

# தீர்மானங்கள்

*மதுரை மாவட்ட மாநாடு மார்ச் 8, 9-ம் நாட்களில் பழனியில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில இங்கு தரப்படுகின்றன.*

பெரியாறு மின்சாரத் திட்டம்—வைகை அணைக்கட்டுத் திட்டம் ஆகியவற்றில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அத்திட்டங்கள் முடிவடைந்ததும் வேலையின்றி மிகக் கொடிய தொல்லைகளுக்கு ஆளாக நேரிடுமாதலால், இப்போதிருந்தே அப்பகுதிகளில் தக்க தொழிற்சாலைகளை அமைத்து அவர்களுக்கு வேலைதர அரசியலார் ஆக்கத் திட்டங்களில் உடனடியாக ஈடுபட வற்புறுத்துவதுடன் அத்தொழிலாளர்களுக்கு உள்ள தற்கால குறைகளையும் அகற்றுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

✱

இந்திய அரசியலாரின் இரயில்வே வருமானம் சென்ற ஆண்டினைவிட இந்த ஆண்டு அதிகரித்திருப்பதுடன், அத்தொகையில் குறிப்பிடத்தக்க பெருமளவு தென்னக மாநிலங்களிலிருந்து கிடைக்கப் பெற்றிருந்தும், தென்னகத்தின் இரயில்வே பாதைகளை விரிவுபடுத்தவும் வசதிப்படுத்தவுமான திட்டங்களை நிறைவேற்றாது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்தும் அவைகளை நீக்கியிருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், கீழ்க்கண்ட இரயில்வே பாதைகளை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே நிறைவேற்ற வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

1. நெல்லைச் சந்திப்பிலிருந்து—கன்னியாகுமரி வரை;
2. திண்டுக்கல்லிலிருந்து பெரியகுளம் வழியாகக் கூடலூர் வரை;
3. மதுரையிலிருந்து மேலூர்—திருப்பத்தூர் வழியாகக் காரைக்குடி வரை;
4. மதுரையிலிருந்து — அருப்புக்கோட்டை வரை.

✱

1901-ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின்போது திட்டமிடப் பட்டு, 1913-ம் ஆண்டில் நிறைவேற்ற உறுதி செய்யப்பட்டு, முதல் உலகப் போரின் காரணமாகநிறுத்திவைக்கப் பட்டு, மீண்டும் 1927-ல் எடுத்துக் கொளளப்பட்டு, பொருளாதாரக் குறைவைக் காரணமாகக் காட்டி மீண்டும் நிறுத்திவைக்கப்பட்டு, 1951-52-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியினர் அத்திட்டப்படி இடம் குறிப்பிட்டு, பழனி சண்முக நதிக்கு மேற்குப் பகுதியில் கால்வாய் வெட்டப்பட வேண்டியிருந்ததைச் சில காங்கிரஸ் தலைவர்களின் சொந்த நலனைக் கருதி பழனிக் கிழக்குப் பகுதியில்தான் அக்கால்வாய் கொண்டுவரப்பட வேண்டும் என்று இடையூறும் பிடிவாதமும் காட்டப்பட்டு அத்திட்டம் செயல்படாதிருப்பதைக் கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன் அரசியலார் உடனடியாக அத்திட்டத்தை பழனி சண்முக நதிக்கு மேற்குப் பகுதியில் நிறைவேற்றி பழனி வட்டத்தில் வாழ் மக்களின் வறண்ட வாழ்வை வளமாக்க வேண்டுமென்று அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

✱

தமிழ் மாநில அரசியலார் அண்மையில் வெளியிட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் டீசல் எண்ணெய் வரியை 10 புதிய காசுகளிலிருந்து 35 புதிய காசுகளாக உயர்த்தியிருப்பது, விவசாயத் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள இலட்சக்கணக்கான மக்களைப் பெரிதும் பாதிக்குமாதலால், விவசாயத்திற்கு உபயோகிக்கக்கூடிய பம்பு செட்டுகள், டிராக்டாகள் முதலானவைகளுக்கு உபயோகிக்கும் டீசல் எண்ணெய் மீது வரியை உயர்த்தாமல் விலக்கு அளிக்கும்படி அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

✱

பெரியகுளத்திற்கு மேற்கேயுள்ள மலைத் தொடரிலிருந்து வருகின்ற தண்ணீரை வீணாக்காமல் தடுப்பதற்காக, சோந்துப்பாறை என்னுமிடத்தில் அணை கட்டுமாறும் அதனை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்குமாறும் அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

✱

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த அலங்காநல்லூர்—பாலமேடு வட்டாரத்தில் உள்ள "சாத்தியாற்றில்" ஒரு சில இலடச ரூபாய்கள் செலவில் ஓர் அணை கட்டி அதன்மூலம் "பால-மேடு நத்தம்" வட்டாரத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் நீர்வளம் பெற்று ஆயிரக் கணக்கான டன் உணவு தானியங்கள் உற்பத்தி பெருக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்னமேயே பூர்வாங்க ஏற்பாடுகள் செய்தும், முதலாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அமைச்சர் கக்கன் அவர்கள் மறு முறையும் வந்து பரிசீலனை செய்தும் இதுவரை யாதொரு விதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பதைக் கண்டு இம்மாநாடு வருந்துவதுடன் அணைக்கட்டை உடனடியாக மாநில அரசினரை கேட்டுக் கொள்கின்றது.

✱

கண்டமனூர் ஜமீன் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே அப்பகுதியிலுள்ள கடமலைக் குண்டைச் சேர்ந்த நரசிங்கபுரம் கிராமப் புலன்களைப் பல உழவர்கள் தம் உழைப்பால் செழிக்கச் செய்திருந்தனர். அப்புலன்களைப் பற்றி விசாரணை நடத்திய மதுரை அசிஸ்டெண்ட் செட்டில்மெண்டு ஆபிசர் அவர்களின் விசாரணையின் பேரில் ஏழை விவசாயிகள் பல தலைமுறைகளாகப் பயிரிட்டுவரும் பெருவாரியான பரப்பை, மாற்றியமைக்க வேண்டுமாய் 17-1-58-ல் அரசினர்க்குச் சிபார்சு செய்துள்ளார். ஆனால், உழவு நிலங்களைக் காடுகளாக மாற்றவும் மலைகளை முச்சாலிக்காக் காடுகளாக மாற்றவுமான சம்மந்தப்பட்ட இலாக்காவினரின் நடவடிக்கையினால் பீதியும் அவநம்பிக்கையும் ஏமாற்றமுமே அடைந்திருக்கின்றனர் மக்கள். இந்த ஆயிரமாயிரம் உழவர்கட்கு அரசினர் உரிமை வழங்கத் தவறினால் அது அவர்களைக் கொதித்தெழவே செய்யும். இந்த நிலங்களைத் திருத்த அதன் வளத்திலேயே தம் வாழ்வை வைத்திருக்கும் மக்களுக்கு, அவரவர் பெரும் உழைப்பின் பேரிலே உருவான அந்தந்த நிலங்கள் அனைத்தையும் அவரவர்க்கே சர்வே செய்து செட்டில்மெண்ட் பட்டாக் கொடுத்து உதவும்படி சென்னை சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

✱

# இன்ஞெரு முந்த்ரா!

—[அண்ணல்]—

"ஒரு கம்பெனி, ஆரம்பித்தேன்..."

"உனக்கு ஏது முதல்?"

"கடன் வாங்கினேன்!"

"யார் பணம் கொடுத்தார்கள்...?"

"அதிக வட்டி தருவதாகச் சொன்னேன்! ஒரு செட்டியார் கொடுத்தார்!!"

"எவ்வளவு வாங்கினாய்?"

"ஒரு இலட்சம் வாங்கினேன்! என்ன வட்டி தெரியுமா? அரை இலட்ச ரூபாய் வட்டி!!"

"டே, அப்பா!"

"என்ன செய்வது? தொடங்கிய தொழில் சினிமாத் தொழில்! ஒரு சான்சு அடித்தால், முதலையும் திருப்பிக் கொடுத்துவிட்டு, வட்டியையும் கொடுத்துவிடலாமல்லவா? பிசினஸ்தானே!!"

"என்ன ஆயிற்று?"

"வட்டியை ஒரு ஆண்டுக்குள், மாதா மாதம் தவணை மூலம், கொடுத்துவிடுவதென்றும், பிறகு முதலைக் கொடுப்பதாகவும் ஏற்பாடு. அதன்படி இந்த மாதம் 4,000 ரூபாய்க்குமேல் கொடுக்க வேண்டும்..."

"பணம் இருக்கிறதா கொடுக்க..."

"இல்லை! அதுதான், யோசிக்கிறேன்"

"என்ன செய்வதாக உத்தேசம்...?"

"இன்னொருவரிடம் ஒரு பத்தாயிரம் ரூபாய் வட்டிக்குக் கேட்டிருக்கிறேன். அதை வாங்கி, இந்த வட்டியைக் கொடுப்பதாக உத்தேசம்..."

"புதிதாக ஒரு பத்தாயிரம் கடன் வாங்கினால், அதற்கு மாதா மாதம் வட்டித் தவணைக்கு ஒரு ஐந்நூறு வேண்டுமே! அடுத்த மாதம் என்ன செய்வாய்?"

"இன்னொரு இடத்தில் வாங்கி, புரட்டிக்கொள்வேன். பிசினஸ்தானே! இதை வாங்கி அதுக்கு, அதை வாங்கி இதுக்கு என்று புரட்டிக்கொள்ள வேண்டியதுதானே!!"

*

அஞ்சாமல், ஆபத்தை விலைக்கு வாங்கும் அசகாயசூரர்கள் உண்டு வியாபாரத் துறையில்! அதிலும், முதலில்லாமல் கடை விரிபபோர், துணிந்து வட்டிக்குமேல் வட்டியாகக் கொடுத்துப் பணம் வாங்குவார்கள்!!

இதன் காரணமாக, முதல் மாதம் ஒரு சினிமாக் கம்பெனி வைத்தவர், அடுத்த மாதம் இன்னொரு படம் ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லி, இன்னொரு இடத்தில் பணம் 'பேத்து மாத்தல்' செய்வார், அதை அடைக்க இன்னொரு பிசினஸ்! இப்படி சங்கிலித் தொடர்போல செய்துகொண்டிருப்பார்கள்!!

முந்திரா இப்படி, ஒன்றன்மேல் ஒன்றாகப் பல கம்பெனிகளில் தலையிட்டாரல்லவா? அதற்குக் கூடக் காரணம் இதுதானாம்! ஒரு கம்பெனியின் பங்குகளை வாங்குவாராம் — அதற்கு ஒரு இலட்சம் கொடுக்க வேண்டுமென்றால் — பாங்கிலோ, பணம் படைத்தவரிடமோ, வாங்குவாராம். அப்படி வாங்கிய பணத்தைக் கொடுப்பதற்காக, இன்னொரு கம்பெனியின் பங்குகளைத் துணிந்து இரண்டு இலட்சம் ரூபாய்க்குவாங்குவாராம். அதைக் காட்டி இன்னொருவரிடம் பணம் கடன் பெற்று, முதல் கடனைத் தீர்த்து அந்தக் கம்பெனியின் பங்குகளைத்தனது ஆக்குவாராம்! இப்படித் தொடர்ந்து செய்யும்போது, சொன்னால் சொன்னபடி செய்ய முடியாமற்போய், "நாணயம்" கெடவும் நேருமல்லவா? அப்படிப் பல தடவைகள் கெடவே, அவரிடம் எவரும் கொடுக்கல் வாங்கல் வைக்க அஞ்சினார்கள்! அதனால், தனிப்பட்டவர்களை :விட்டு, எப்படியோ சர்க்காரிடமே கடன் பெற முயற்சித்து—இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷனின் உதவி பெற்று, கடைசியில் மாட்டிக்கொண்டார்!!

அதிக வட்டிக்குப் பணம் வாங்கி, வட்டியையும் கட்ட முடியாமல், கடனையும் திருப்பித் தர இயலாமல் தவிக்கக்கூடிய "இன்னொரு முந்திரா" உதயமாகிக் கொண்டிருக்கிறார்! யார் அவர் என்று அறிந்திடும் ஆவல் ஏற்படக்கூடும். வேறு யாருமல்ல, எந்த முந்திராவைக் குற்றவாளிக் கூண்டிலேற்றி யிருக்கிறார்களோ, அதே டில்லி சர்க்கார்தான் இன்னொரு முந்திரா!!

தொழில் துறையில் ஒரு சாம்ராஜ்யம் ஏற்படுத்த விரும்பியதாகச் சொன்னார் அந்த முந்திரா. இந்த 'முந்திரா'வும், அரசியல் துறையில் மாபெரும் சாம்ராஜ்யம் உருவாக முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

டில்லி அரசு, சுதந்திரம் உதயமான நாள் முதல், ஏராளமான கடன்களை வாங்கிக்கொண்டு வருகிறது. எப்படி முதலில்லா வியாபாரி, பெரும் வணிகனாக முற்படுவானோ, அதுபோல டில்லியும், அகண்ட பாரதத்தை கட்டியாளப் பல தரப்பட்ட ஆசைகளை வளர்த்து வருகிறது! அந்த

ஆசைகளில் ஒன்று, நாடெங்கும் ஒரே சமயத்தில் ஏராளமான அணைக்கட்டுகளையும், நதித்தேக்கங்களையும் தோன்றும்படி செய்வதென்பதாகும். இதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களும் போட்டு, வேலை செய்து வருகிறார்கள்.

இந்த ஆசை தீதென்றோ, தவறென்றோ நாம் கூறவில்லை! ஏழை, வசதி படைத்தவனாக ஆவதும்—கூனன், நிமிர்ந்து உலவிட முயற்சிப்பதும் — கூடாதென எவரும் கூறார்!! ஆசையின் காரணமாக, ஆபத்தில் அடியெடுத்துவைக்கக் கூடாது. சாதாரணமானவர்கள் நிலையே இதுவென்றால், ஒரு அரசு, எவ்வளவு பொறுப்போடும் முன்னெச்சரிக்கையோடும் நடந்து கொள்ளவேண்டும்.

சுதந்திரம் பெற்றதும், பெற்றதைக் காப்பாற்றிக்கொள்ளும் ஆசையேற்பட்டது இந்தியத் தலைவர்களுக்கு. சுயராஜ்யப் போராட்டத்தின்போது, "வெள்ளையன் ஓடியதும், நாட்டில் தேனாறு ஓடும், பாலாறு ஓடும்! சுகம் மலரும்! சமத்துவம் ஏற்படும்! பஞ்சம் பறக்கும்!", என்றெல்லாம் ஊட்டியிருந்த ஆர்வத் தீயினுக்கு, பதில் தரவேண்டிய கட்டம் உண்டாயிற்று. அதனால், ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம், அது செய்யப்போகிறோம் இது செய்ய உத்தேசித்திருக்கிறோம் என்று சொல்லலானார்கள். சொன்னது மட்டுமின்றி, திட்டங்களையும் போட்டார்கள். திட்டம் போடும் போது, இந்த உபகண்டத்தின் வருமானம் என்ன-அதில் ஓராண்டுக்கு ஏற்படும் செலவுகள் யாவை —அந்தச் செலவுகளில் எதனைக் குறைக்கலாம் என்று கணக்கெடுக்கவில்லை.

மாறாக, சிவில் நிர்வாகம், இராணுவம் போன்ற இனங்களில் செலவுகளை அதிகரித்தும் கொண்டார்கள். ஆண்டாண்டுதோறும் இந்தச் செலவினங்கள் வளர்ந்து கொண்டே வருகின்றன! புதிய திட்டங்கள் வேறு தீட்டினார்கள்!! இரண்டையும் சமாளிக்க ஏது பணம்? எனவே, அமெரிக்காவிடமும், உலக பாங்கிடமும் கடன் மேல் கடன் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

கடன் வாங்கினால், திருப்பித்தர வேண்டுமல்லவா? அதற்காக ஒரு ஏற்பாடுசெய்து கொண்டார்கள்! ஒவ்வோராண்டும் சிறுசிறு தவணையாகக் கடனைத் தீர்த்துவிடுவதென்பதே, அந்த ஏற்பாடு. அதனால், ஒவ்வொராண்டும், திட்டங்கள்—இராணுவம்—சிவில் நிர்வாகம் ஆகியவை தவிர்த்து, கடன் தவணைக்காகப் பணம் சேகரிக்கும் அவசியத்திலும் இருக்கிறது டில்லி. தவணை மட்டுமல்ல, வெளியிடங்களிலிருந்து கடன் வாங்கியிருக்கும் பணத்துக்கும் வட்டியுண்டு. அந்த வட்டியையும், தவணையோடு சேர்த்துக்கட்டிக் கொண்டு வரவேண்டும்!!

**1958—59 ஆண்டில் மட்டும் இப்படிச் செலுத்தவேண்டிய தொகை 23 கோடி ரூபாய்கள் என்று பட்ஜட்டில் குறித்துள்ளார்கள்.**

**1960ல் இப்படிச் செலுத்தவேண்டிய தொகை மட்டும் 123 கோடி ரூபாய் வரக்கூடுமாம்! தெரிவிக்கப்படுகிறது!!**

அதற்குப் பிறகு, போட்டிருக்கிற திட்டப்படி எஃகு இங்கே உற்பத்தியாகப் போகிறது—அரிசி, கோதுமை உற்பத்தியும் ஆகிவிடும் — இவைகளையெல்லாம் கடன் கொடுத்த நாடுகளுக்கு நாம் அனுப்பமுடியுமாதலால், இப்படி நாம் ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகை, வரவரக் குறையும் என்றும் யூகிக்கப்படுகிறது!!

இந்த யூகம் வெற்றியைத் தருமா, 1960க்குப் பிறகும் ஆண்டுதோறும் 123 கோடி கடனுக்கும் வட்டிக்கும் நாம் அழவேண்டுமா என்பது பற்றியும் ஐயம் ஏற்பட்டுள்ளது. அசோக்மேத்தா சொல்கிறார், "எவ்வளவு எஃகும் இரும்பும் அதிகமாக உற்பத்தியானாலும், அவ்வளவும் இங்கே தேவைப்படும். எவ்வளவு உணவுப்பொருள் உற்பத்தியானாலும், அவ்வளவும் இங்கே உபயோகமாகும்", என்று. வளரும் தொழிற்சாலைகளையும், ஆண்டுதோறும் அதிகரிக்கும் மக்கள் தொகையையும் கணக்கிடும்போது, அசோகமேதாவின் கூற்றுச் சரியெனவே தோன்றும்! அப்படியாயின், டில்லி சொல்வது போல, 1960க்குப் பின்னும் வெளிநாடுகளுக்குக் கொடுக்கவேண்டிய தொகையில், குறைவு ஏற்படும் என்று தெரியவில்லை!!

இதுவரையில் டில்லி வாங்கி வந்திருக்கிற கடனுக்குத்தான், இது.

இன்னும் வெளியுதவியை எதிர்பார்ப்பதால், அதுவும் கிடைத்துவிட்டால், **தவணையாகவும் வட்டியாகவும் கட்டக்கூடிய தொகை இன்னும் பல கோடிகள் அதிகரிக்கும் அறிகுறி இருக்கிறது!!**

எப்படி அவைகளையெல்லாம் தீர்ப்பார்கள்? இப்போது வேண்டுமானால், அதை வாங்கி இதற்கும், இதை வாங்கி அதற்கும், இப்படி "பேத்துமாத்தல்" செய்யலாம்! நாணயத்தையும் காப்பாற்றிக் கொள்ளலாம்!! எதிர்பார்ப்பது போல, உற்பத்தியும் கூடாமல், திட்டமும் நிறைவேறாமற்போய், ஒரு சங்கடம் வந்துவிட்டால், அப்போது என்ன செய்யும் டில்லி? நினைக்கவே, அச்சம் ஏற்படும்! அப்படியொரு நிலை தனக்கு ஏற்படாதென்றுதான் கோடிக் கணக்கில் பணத்தைப் புரட்டிக்கொண்டிருந்த முந்திராவும் நினைத்தார். ஆனால் கடைசியில் என்ன நடந்தது!!

முந்த்ரா, தனது வியாபாரத்தையும் தனக்குள்ள கம்பெனிகளையும் காட்டி, கடன்மேல் கடன் வாங்கிச் சமாளித்தார்! டில்லிக்கு, இப்படிக் கடன் வாங்க இந்திய உபகண்டத்திலிருக்கும் வளங்களும் மனிதத் தொகையும், பயன்படுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளும், அதனால்தான், கடன்மேல் கடன் கொடுக்கத் தயங்கவில்லை—வட்டி வரும் என்கிற உறுதியும், தவணையில் பணம் கிடைக்கும் எனும் நம்பிக்கையும் இருகிறதல்லவா!!

**"எப்படியாவது இந்த வட்டிகளையும், தவணையில் பணம் கொடுப்பதையும் நாம் கொடுக்கவேண்டும். இப்படி, தவறாமல், நாணயத்தோடு நாம் வாங்குகிற கடனைத் தீர்த்துக் கொண்டே வரவேண்ண்டும். மென்மேலும் கடன் வாங்கியாவது தீர்த்துக்கொண்டே வரவேண்டும்"**

இப்படி ஒருயோசனை, டில்லிக்கு இருந்து வருகிறது! அதைக் குறிப்பிட்டு, பாராளுமன்றத்தில் பேசிய கிருபளானி, சொல்லியிருக்கிறார் — "இந்தயோசனையை நான் கேட்டபோது, விபரீதமாகப்பட்டது. ஒரு கடனை அடைக்க இன்னொரு கடன் என்கிற இந்த முறை முந்திரா நடத்திய விவகாரத்தைப் போன்றதேயொழிய வேறில்லை" என்பதாக.

இது, எங்கே கொண்டுபோய் விடும்? — சிக்கனமும் இல்லை— இராணுவச் செலவோ அதிகரிக்

கிறது—சிவில் நிர்வாகச் செலவும் வளருகிறது — வட்டியும் தவணையில் செலுத்தவேண்டிய பணமும் ஏறும் இருக்கிறது — ஐந்தாண்டுத் திட்டம் வேறு கோடிகோடியாக விழுங்குகிறது—வரிபோட்டு வரிபோட்டு வசூலிக்கவுமோ முடியாது—மென்மேலும் கடன் வாங்கிச் சமாளிக்கலாம் என்கிற யோசனையும் வளருகிறது — இப்படியொரு சூழ்நிலையில், டில்லிக் கப்பல், எத்தனை ஆண்டுகளுக்கு பிரயாணம் செய்ய இயலும்? அலைகள் பல, திமிங்கிலம்போன்ற செலவினங்கள் ஒருபக்கம், சூறாவளிப் புயல்—கலம் என்றாவது கவிழ நேருமே, அப்போது என்ன செய்வது என்கிற சங்கடம் ஏற்படத்தானே செய்யும்? அதனால் தான், பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்! நேரு அளவுக்குமேல் ஆசைகளை வளர்த்துக் கொண்டே போகிறார் என்று வருந்துகிறார்கள் — பயமும் ஐயமும் அடிக்கடி அவர்களால் தெரிவிக்கப்பட்ட வண்ணமே உள்ளது.

நிபுணர்கள்— அறிஞர்கள் கூறுவது இருக்கட்டும். அண்மையில், வேறு ஒருவரும் இந்த ஐயத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர், ஒரு ஏனோதானோவல்ல — எந்த ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்றும், அவை நிறைவேறிவிட்டால இன்பம் சுரக்கும் என்றும் பேசப்படுகிறதோ, அந்த திட்டக் கமிஷனின் உறுப்பினராக இருந்த கே. சி. நியோகி என்பார்.

"எச்சரித்தேன்-

இருக்கின்ற வசதிகளைக்கொண்டே, எந்தத் திட்டமும் போடப்பட வேண்டுமென எச்சரித்துக்கொண்டே வந்திருக்கிறேன்.

என் கருத்தை மதிப்பாரில்லை. தொடர்ந்து பல திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டே உள்ளன.

இப்படி எச்சரிக்கைகள் விட்டும் அவைகளை ஏற்கவில்லையென்றால், பிறகு கேடுதானே ஒருநாளைக்கு ஏற்படும்?

அதற்குத் துணையாக நானும் இருந்தேன் என்கிற பழி எனக்கு வேண்டாம்!"

என்று அறிக்கையொன்று விட்டுவிட்டு, தன் பதவியையும் ராஜினாமாச் செய்திருக்கிறார்! அவர் திட்டக்குழுவின் உறுப்பினர்— அவரே இந்த முடிவுக்கு வந்திருக்கிறார் என்னின், வேறென்ன சொல்ல இயலும்!!

பயம் அதிகமாகிறது — டில்லி என்னசெய்யுமோ என்கிற திகில் பரவுகிறது—ஆச்சாரிய கிருபளானி, முந்திரானை நினைவூட்டுகிறார்—சிந்திக்க வேண்டியவர்களோ, தெந்தினா பாடுகிறார்கள்— பாடிக்கொண்டே இருக்கிறார்கள் ..............

*

---

# அவரது ஆசை!

**"கேரள கௌமுதி", எனும் மலையாள ஏட்டில் கே. அய்யப்பன் எழுதிய கட்டுரை இது. இவர் முன்னாள் அமைச்சரும், சீர்திருத்தவாதியும் ஆவார் :—**

"மைசூரில் ஜோக் என்ற இடத்தில் உள்ள நான்கு நீர்வீழ்ச்சிகளின் பெயர்களை மாற்றி ராம, தாஸ, லக்ஷ்மண, சீதை என்ற பெயர் வைத்தால்நன்றாகயிருக்குமென்று ஆச்சாரிய வினோபா, அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்! வினோபா தன் சீடகோடிகளோடு பெப்ரவரி திங்கள் 23-ம் நாள் ஜோக் என்ற அந்த இடத்திற்கு சென்றிருக்கிறார். அவரை வரவேற்பதற்கு மைசூர் அரசின் ஒரு உதவி மந்திரியும் பெரிய அரசாங்க ஊழியர்களும் சென்றிருந்தார்கள். நீர்வீழ்ச்சிகளை பார்த்த பிறகுதான் பெயர் மாற்றம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்கு திரள் திரளாக மக்கள் அங்கு போவார்கள். அவர்களுக்கு பாரத நாகரிகத்தின் மேன்மை பற்றி எப்பொழுதும் நினைவிருக்க வேண்டுமென்பதற்காகத்தான் மேல்சொன்னபடி குறிப்பிட்டிருக்கிறார்!! பெயரிலுள்ள "தாஸ" என்ற வார்த்தை அனுமானைகுறிக்குமாம். ராம, லட்சுமண், சீதை. இராமாயண கதை நினைவிலிருக்கத் தகுந்த ரீதியில் உள்ளதுதான் பாரத நாகரீகம் என்பது அந்த நாகரிகத்தின் மேன்மையாகாது.

அசோகச் சக்கரம், அசோக ஸ்தூபி வழியாக மற்றொரு பாரத நாகரிகம் எப்பொழுதும் நினைவிருக்க வேண்டுமென்றுதான் பண்டித நேரு விரும்புகிறார்.

இராமாயணம் மட்டும் தான் பாரத நாகரீகம் என்பது இராம பக்தியின் மயக்கமே தவிர வேறல்ல. பாரத நாகரீகம் மொத்தத்தில் இராமாயணத்தைவிட மேன்மையுடையது.

வினோபாவினிடத்தில் அரசாங்கத்தினுடைய செல்வாக்கைப் பார்க்கும்பொழுது இந்தப் பெயர் மாற்றம் நடந்துவிடுமென்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. வடஇந்தியர்களோடும் இராமாயணத்தோடும் தென்னிந்தியர்களில் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கிற இந்த சமயத்தில் இந்தப் பெயர் மாற்றம் தேவைதானா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. திராவிட கழகக்காரர்களுடைய எதிர்ப்பை அது மீண்டும் தூண்டிவிடும். நீர்வீழ்ச்சி மைசூரில் ஆனதினால் கழகக்காரர்களுக்கு அங்கு சென்று போராட எளிதல்லவென்று நினைத்திருக்கலாம். இந்த பெயர் மாற்றத்தைப்பற்றி மற்றொன்றும் குறிப்பிட வேண்டியதுண்டு. ஜோக் என்ற வெள்ளைக்காரர் காடுகளும், மலைகளும் கடந்து மிகவும் கஷ்டப்பட்டு கண்டுபிடித்ததினால் தான் இதற்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டது. அந்த வெள்ளைக்காரரின் பெயரை அழித்துவிட வேண்டிய எந்த அவசியமுமில்லை. தவிரவும் அப்படிச் செய்வது சரித்திர வரலாற்றோடு செய்கிற கொலைபாதகமாகத்தானிருக்கும். வினோபாவினுடைய பெயர் மாற்றத்தை பார்க்குமிடத்தில் இடங்களின் பெயர்களை மாற்றாமல் ஆட்களின் பெயரையும் மாற்றினால் மிகவும் நன்றாயிருக்கும். இந்திய பிரதமர் பண்டித நேருவின் பெயர் அனேக லட்சம் மக்களால் எழுதவும் பேசவும் செய்யப்படுகிறது. அவர்கள் எல்லாம் வினோபா நினைக்கிற மாதிரி பாரத நாகரீகம் எப்பொழுதும் நினைவிலிருப்பதற்கு பிரதமர் நேருவின் பெயரை மாற்றி இராம இராவண யுத்தமென்று ஆக்கினால் நல்லது. அதுபோல் வினோபாவினுடைய பெயரை குரு பாண்டவ யுத்தமென்று வைக்கலாம். காந்தியாரின் பெயரை தசாவதாரம் என்றும் வைக்கலாம்!!"

*

# கிருபளானியின் குமுறல்!

**மார்ச் 14ந் தேதி, டில்லி பார்லிமெண்டில், முன்னாள் காங்கிரஸ் தலைவர் ஆச்சாரியா கிருபளானி, எழுப்பிய குமுறல் இது. கவிதையல்ல!**

ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால்
அடிக்கடி போடுறீர், வரிமேல் வரி!
ஒவ்வோராண்டும் ஒவ்வொரு புதுவரி
ஏழைக்கல்ல, சீமானுக் கென்கிறீர்!
தினசரி பேசுறீர் — திரட்டுறீர் பலவரி!!
அப்படித் திரட்டும் அதிகவரி யெல்லாம்
அழிவதோ, திட்டத்துக்கல்ல; நாட்டுக்கு அல்ல;

ஐயகோ! எண்ணிடின், கண்ணீர் வருகிறது
அகிம்சாமூர்த்தி, அன்புக்கொரு அண்ணல்,
உத்தமர், தூயவர், உயர்வுடைத் தலைவர்,
சத்தியம் தவறா சாந்தசீலர், மகாத்மா காந்தி,
வாழ்நாளெல்லாம் அமைதிக்கு ஆக்கினார்!
அவருடைய நாட்டில், அவருடைய சீடர்கள்—
செய்வது என்ன? செய்வது என்ன?

பண்டித நேருவே! பாராள்பவரே!!
பதில் எனக்களித்திட வேண்டும்—
" அன்பே, எம் வழி. அணுகுண்டு ஏன்?
சமாதானம் - சாந்தம்" - என்று சாற்றுறீர் நாளும்
உலகத்துக் கெல்லாம் போதனை புரிகிறீர்
விடுமின் போர்முறை! விடுமின் வீண்வழி!!"
என்றே தினமும் எடுத்துரைக்கிறீர்.

ஆனால்,
இந்திய சுதந்திரம் எய்திய பிறகு.
எவ்வளவு செலவு உயர்ந்துள்ளது தெரியுமா?
இராணுவத்துக்கு மட்டும் நூறு கோடி.
ஆங்கிலேயனைவிட அதிகரித்துளளோம்!
அது போதாதென இந்த ஆண்டும்
பன்னிரு கோடி அதிகமாக்கியுள்ளோம்!!
ஏன் இது? ஏன் இது? ஏன இது?

இலங்கை எதிர்க்கப் போகிறதா, நம்மை?
இல்லை, பர்மா படையெடுக்க வுள்ளதா!
நேபாளம், நீட்டுகிறதா, ஆயுதம?—
சீனத்தோடோ "பாய், பாய்", என்கிறோம்!
ரஷ்யாவோ, நமக்கு நேசன் என்கிறோம்!!
யார் நமது எதிரி? எதற்கோ செலவு?
என்ன காரணம், இராணுவம் பெருகிட!

பாகிஸ்தான் மிரட்டும்! — என்று கூறலாம்
பாகிஸ்தான நிலை, நாம அறியாததல்ல.
அன்பால், பேச்சால், அணுகுவோம் அவர்களை!
இந்தியாவிடம் பாய்ந்தால் இனனொரு
உலகப்போர் ஏற்படும எனபதறியா,
இளிச்சவாயர்களல்ல! எனினும, ஏனோ
அழிககிறீர் பணததை! ஐயகோ - ஒனறு, இரண்டா
நூறு கோடி! நூறு கோடி! நூறு கோடி!!

வரிமேல் வரிபோட்டு வாங்கும பணத்தை
இப்படி அழிக்கிறீர்! இதனால், உமக்கு,
திட்டத்தை நிறைவேற்ற பணமில்லை—
பதறுறீர்! பேசுறீா! திகைககிறீர்! தவிக்கிறீர்!
உதட்டில் அன்பு — உலகத்துக்கு முழக்கம்
நாட்டிலிங்கே நடப்பது அநீதி! நடப்பது விரயம்!!
நன்று நேருவே? நனறு நண்பரே!!

[ " அனல் " ]

# தேசாயும் சென்னையும்!

யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்ற ரீதியில் புதிய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் சென்னைக்கு விஜயம் செய்தார். திரு. தேசாய் நிதி மந்திரியாக்கப்பட்டார்என்று செய்தியைத் தொடர்ந்து அவரும் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கினார். ஆனால் சென்னை மந்திரிகள் யாரும் விமான நிலையத்திற்குச் சென்று அவரை வரவேற்கவில்லை.

சென்னைக்குப் புதிய நிதி மந்திரி மொரார்ஜி தேசாய் வந்தபோது அவரை வரவேற்பதில் திரு. கோயங்காதான் நடுநாயகமாக விளங்கினார்.

புதுடில்லியிலிருந்து வரும் மந்திரி, அவர் எவ்வளவு பெரிய அந்தஸ்தில் இருந்தாலும்சரி ஒரு தனிப்பட்ட முதலாளியின் வீட்டில் தங்கினால் அவரைப் போய் ஸ்தல மந்திரிகள் பார்க்காமலிருப்பதுதான் மூறை. அந்த நல்ல முறையைத்தான் சென்னை மந்திரிகளும் கையாண்டிருக்கிறார்கள். இந்தப் படிப்பினையைத் தேசாய் புரிந்துகொண்டாரா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.

புரிந்திருந்தால் அவர் சென்னைக்கு வரும்போது சர்க்கார் விடுதியில் தங்க வேண்டியதுதான் முறை. அந்த முறை ஏன் வழி தவறிவிட்டது எனபதுதான் புரியவிலலை. செனனை மந்திரி சபையையும சர்க்காரையும திரு. தேசாய் மதித்திருந்தால் சாககார் விடுதியில் தங்கியிருக்க வேண்டும. ஒருவேளை செனனை மந்திரி சபையைவிட ஒரு தனிபபட்ட முதலாளிக்கு அவர் மதிப்புக்கொடுககிறாரோ எனனவோ யார்கண்டது? இந்தச் சூழ்நிலையில் மதியாதார் வாசல் மிதிக்க வேண்டாம என்ற ரீதியில் தான மற்றவர்களும நடந்துகொளவார்கள்.

—"நவ இந்தியா"